Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 32 சனிக்கிழமை (16.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 209

வாழ்நாள் முழுவதும்
வளமுடன் வாழ
அண்ணா
ஜீவாகாரம்
உடனடியாக உண்ணககூடிய
நிலையில் உள்ள சத்துணவு
விபரங்களுக்கு
அண்ணா கோப்பிக் கடை
இல 4 நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

# புலிகளின் யோசனைகளுக்கு உடன் நடவடிக்கை எடுக்காவிட்டால் யுத்தநிறுத்தம் கேள்விக்குறியாகும்

## கண்காணிப்புக்குழுவுக்கு விடுதலைப்புலிகள் கடிதம்

(கிளிநொச்சி)

**விடுதலைப்புலிகளினால் கடந்த மாதம் 30திகதி அன்று அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்ட யோசனைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

**இவ்வாறான நடவடிக்கைகளை எடுப்பதில் மேலும் காலதாமதம் ஏற்படுமானால் நாம் ஏற்கனவே கூறியதைப்போன்று எமக்கே உரிய பாதுகாப்பான பயண வழிமுறைகளை கைக்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம். இந்நிலைமை யுத்த நிறுத்த உடன்படிக்கையை மிகவும் சிக்கலான நிலைமைக்கு தள்ளிவிடும் என தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அரசிற்கு எச்சரிக்கை கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.**

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இக்கடிதத்தில குறிப்பிடப்பட்டுள்ளதாவது

(2ஆம் பக்கம் பார்க்க)

## இந்துமாநாட்டில் இரு அறிஞர்களுக்கு பட்டம் வழங்கிக் கௌரவிப்பு





அகில இலங்கை இந்துமாமன்ற பொன்விழாவை ஒட்டி யாழ்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நேற்று ஆரம்பமான இந்துமாநாட்டில், அருட்கவி சீ.வினாசித் தம்பிக்கும் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டிக்கும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

சைவசமய வளர்ச்சிக்கும் ஆன்மீகத்துறையின் வளர்ச்சிக்கும் அயராது உழைத்தமை, திக்குத்திசை தெரியாது தவித்து நிற்கும் மக்களுக்கு அருள்வாக்குக் கொடுத்து நெறிப்படுத்தியமை போன்ற சேவைகளுக்காக அருட்கவி வினாசித்தம்பிக்கு 'ஞானவித்தகர்' என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அதேபோன்று இந்து சமய மக்களின் வழிபாட்டியலை நெறிப்படுத்தியும், ஆதரவற்ற மக்களுக்கு உதவிகளை மேற்கொண்டமை மற்றும் சமூக சமயதொண்டாற்றியமை போன்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்டோவில் பயணம் செய்த மூவர் அக்கரைப்பற்றில் சுட்டுக்கொலை

### ஆட்டோவும் தீக்கிரை

(அக்கறைப்பற்று)

அமபாறை மாவட்டம் அக்கரைப் பற்றுப் பிரதேசத்தில நேற்று முன்தினம் இரவு ஆட்டோவில் பயணம்செய்த இரண்டு முஸ்லிம்களும், தமிழர் [illegible]

அருகில் இம் மூவரினதும் சடலங்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன. இவர்கள் பயணம் செய்த ஆட்டோ தீக்கிரை யாக்கப் பட்ட நிலையில் அவர்களது சடலங் களுக்கு அருகில் காணப்பட்டதாக [illegible]

## இளம்பரிதி–கண்காணிப்புக்குழு யாழில் நேற்று முக்கிய பேச்சு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதிக்கும், யாழ்.மாவட்ட போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுவினருக்கும் இடையில் நேற்று முக்கிய சந்திப்பொன்று [illegible]

நிலைமைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

கண்காணிப்புக்குழு சார்பில் கண்காணிப்பாளர் அன்னாவால்வ் கலந்துகொண்டார். விடுதலைப்புலிகளின் சார்பில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, துணைப்பொறுப்பாளர் கண் [illegible]

## இந்து மாநாட்டின் இன்றைய நிகழ்வு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

அகிலஇலங்கை இந்துமாமன்ற பொன்விழாவை ஒட்டி அகில இலங்கை இந்துமாமன்றமும் யாழ்ப்பாணம் தேசியற்கல்வியியற் கல்லூரியும் இணைந்து நடாத்தும் இந்துமாநாட்டின் இரண்டாம் நாளான இன்றைய நிகழ்வுகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிகழ்வுகள் நாளை [illegible]

## ஆட்டோவும் தீக்கிரை

(அக்கறைப்பற்று)

அமபாறை மாவட்டம் அக்கரைப் பற்றுப் பிரதேசத்தில நேற்று முன்தினம் இரவு ஆட்டோவில் பயணம்செய்த இரண்டு முஸ்லிம்களும், தமிழர் ஒருவருமாக மூவர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

அம்பாறை அக்கரைப்பற்று வீதியில் உள்ள 6வது மைல் கல்லுக்கு அருகில் இம் மூவரினதும் சடலங்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன. இவர்கள் பயணம் செய்த ஆட்டோ தீக்கிரை யாக்கப் பட்ட நிலையில் அவர்களது சடலங்களுக்கு அருகில் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட முஸ்லிம்கள் இருவரும் அதேஇடத்தைச் சேர்ந்த ஆட் (12 ஆம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதிக்கும், யாழ்.மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கும் இடையில் நேற்று முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

முற்பகல் 11மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பின்போது யாழ்ப்பாணத்தில் நிலவும் தற்போதைய நிலைமைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

கண்காணிப்புக்குழு சார்பில் கண்காணிப்பாளர் அன்னாவால்வ் கலந்துகொண்டார். விடுதலைப்புலிகளின் சார்பில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, துணைப்பொறுப்பாளர் கண்ணன்,ஊடக இணைப்பாளர் இ.இமையவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

கை இந்துமாமன்றமும் யாழ்ப்பாணம் தேசியற்கல்வியியற் கல்லூரியும் இணைந்து நடாத்தும் இந்துமாநாட்டின் இரண்டாம் நாளான இன்றைய நிகழ்வுகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிகழ்வுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரலின்படி நடைபெறும் என (12 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் முப்படைத்தளபதிகள் சர்வமதத்தலைவர்களுடன் சந்திப்பு

## பதற்றத்தை தணிப்பது குறித்து ஆராய்வு

(திருகோணமலை)

திருகோணமலையில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலையினை தணிக்கும் வகையில் நேற்று பிற்பகல 3மணிக்கு சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றுள்ளது.

முப்படைத்தளபதி தயாசந்தகிரி தலைமையில் கடற்படைத்தளத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் பொலிஸ்மா அதிபர் சந்திராபெர்ணாண்டோ மற்றும் தளபதிகள்உள்ளிட்டோர் சர்வமதத்தலைவர்களை அழைத்து இப்பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

அண்மைக்காலமாக திருகோணமலையில் இடம்பெற்றுவரும் சம்பவங்களை அடுத்து ஜனாதிபதியால் இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தின் போது திருகோணமலையில் சமாதானத்தையும் அமைதியினையும் நிலைநாட்டுவதற்கு சகல தரப்பினரும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென முப்படைகளின் தளபதி வேண்டுகோள்விடுத்தார்.

அத்துடன் இச்சந்திப்பிற்கு ஏற்பாடு செய்த ஜனாதிபதிக்கு சர்வமதத் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பின் 4 சரத்துக்களை நடைமுறைப்படுத்த உயர் நீதிமன்றம் தடை

(கொழும்பு)

சுனாமிக்குப் பின்னரான நடவடிக் கைமுகாமைத்துவ கட்டமைப்பின் பிராந்தியக் குழுக்களின் நிதியாளுகை மற்றும் அதனுடன் தொடர்புடைய 4சரத்துக்களை நடைமுறைப்படுத்துவதற்கு உயர் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த கட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தத்திற்கு சவால்விடும் வகையில் ஜே.வி.பியின் 39பாராளுமன்ற உறுப்பினர் சமர்ப்பித்த அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான 3 மனுக்களின் மீதான விசாரணையை எடுத்துக் கொண்டபோதே இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்களான ராஜாபெர்ணாண்டோ மற்றும் நிமல்காமினி அமரதுங்க ஆகியோர் அடங்கிய குழுவினர் இவ்வுத்தரவை பிறப்பித்தனர். சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதனை முழுமையாக தடைசெய்ய முடியாது என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

(முதலாம் பக்க தொடர்ச்சி)

# உடன் நடவடிக்கை எடுக்கா விட்டால்...

திரு.ஹக்ரப் ஹோக்லண்ட்,
தலைவர்,
போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு,

அன்புடையீர்,

விடயம்: சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளினூடான எமது உறுப்பினர்களின் பாதுகாப்பான போக்குவரத்து 11 யூலை 2005 எனத் திகதியிட்டு இதுவிடயம் தொடர்பாக நீங்கள் சிறிலங்கா சமாதானச் செயலகத்தினது கடிதத்தினையும் இணைத்து அனுப்பிய கடிதத்தின் பிரகாரம் இக்கடிதம் எழுதப்படுகிறது.

சிறிலங்கா சமாதானச் செயலகப் பணிப்பாளர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்த விடயங்கள் தொடர்பான எமது நிலைப்பாட்டினை தங்களுக்கு நாம் விளக்க விரும்புவதோடு எமது போராளிகளின் பாதுகாப்பான பயண ஒழுங்குகள் தொடர்பான எமது தெளிவான நிலைப்பாட்டை நாம் மீள வலியுறுத்த விரும்புகிறோம்.

"மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசு என்ற வகையில் தாங்கள் கால வரையறைகளை ஏற்றுச் செயற்படுவதில்லை" என சமாதானச் செயலகப் பணிப்பாளர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். உண்மை யாதெனில், கால வரையறைகளின் அடிப்படையில்தான் போர்நிறுத்த ஒப்பந்தமே வரையப்பட்டுள்ளது என்பதை நாம் நினைவுபடுத்த விரும்புகிறோம். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நாளிலிருந்து குறிப்பிட்ட நாட்களுக்குள் வணக்கத்தலங்கள், பாடசாலைகள், மக்கள் வாழும் இடங்கள் மற்றும் பொது இடங்களை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவம் விலகி மக்களின் இயல்பு வாழ்வுக்கு வழிகோலவேண்டும் எனக்கூறும் போர் நிறுத்த ஒப்பந்தம் காலவரையறைகளின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது. இத்தீவில் இரண்டு அதிகார மையங்கள் இருக்கின்றன என்பதை ஏற்றுக்கொண்டு இரு அதிகார மையங்களும் தத்தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை வைத்துள்ளன என்ற உண்மையின் அடிப்படையிலேயே போர்நிறுத்த ஒப்பந்தம் வரையப்பட்டது என்பதை சிறிலங்கா சமாதானச் செயலகப்பணிப்பாளருக்கு இவ்விடத்தில் நாம் நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

போர்நிறுத்த ஒப்பந்த விதிமுறைப்படி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணிகளில் ஈடுபடும் ஆயுதம் தரிக்காத போராளிகளினது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு சிறிலங்கா அரசாங்கத்திற்கே உண்டு. இந்த யதார்த்த நிலையை நிராகரித்துச் செயற்படுவதானது போர்நிறுத்த சூழல் குழம்பிப்போவதற்கே வழிவகுக்கும். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் நோர்வே தூதர்கம் என்பவற்றின் அனுசரணையுடன் இரு தரப்பினருக்குமிடையில் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில்தான் கடந்த மூன்றரை வருடங்களாக எமது போராளிகளினது பாதுகாப்பான பயண ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவ்வாறாக சுமூகமாக இடம்பெற்று வந்த போக்குவரத்துக்கான வழித்துணையில் சர்ச்சையைக் கிளப்பி சமாதான சூழ்நிலையைக் குழப்புவது போர் நிறுத்த ஒப்பந்தத்தின் இருப்பையே ஆட்டங்காணச் செய்கிறது. சிறிலங்கா அரசாங்கமும் அதன் இராணுவ மற்றும் புலனாய்வு அமைப்புகளும் சமாதான சூழலைக் கேள்விக்குறியாக்கி தமிழர் தேசம் மீது மீண்டும் போரைத் திணிக்கும் ஓர் உத்தியாகவே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்களோ என்ற சந்தேகம் எமது மனங்களில் எழுகிறது.

எமது விடுதலை அமைப்பின் ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மீறிச் செயற்பட்டமையினால் கருணாவை அமைப்பிலிருந்து நீக்கி எமது அமைப்பின் தலைமை ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்திருந்தது. இவ்வாறாக, அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒருவரை இன்று இராணுவம் பூரண பாதுகாப்பினை வழங்கி பாதுகாத்து வைத்திருப்பதோடு அவரது பெயரில் கருணா குழுவென இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே செயற்பட்டு வருவது யாவரும் அறிந்த உண்மை. எமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்திலோ அல்லது தமிழர் தாயகப்பகுதியிலோ ஏதாவதொரு நிலப்பரப்பை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் குழுவாக கருணா குழு இயங்கவில்லை. அவரை இராணுவமே முழுமையாகப் பயன்படுத்தி வருவதோடு இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பாதுகாப்பில்தான் அவர் இருக்கிறார் என்பது வெளிப்படையான உண்மை. கடந்த மூன்றரை வருடங்களாகத் தொடர்ந்து வருகின்ற சமாதான சூழலை சிதைப்பதற்கான ஒரு பொறிமுறையாகவே இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் திட்டமிட்ட ரீதியல் கருணாகுழு என்ற பெயரில் இக்குழு உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டுவருகிறது. இதனை நாம் பலமுறை ஆதாரங்களுடன் உங்களுக்குச் சுட்டிக்காட்டி வந்துள்ளோம். தேவையேற்படும் பட்சத்தில் இதனை உறுதிப்படுத்தும் வகையில் மேலதிக தகவல்களை நாம் உங்களுக்கு வழங்கவும் தயாராக உள்ளோம்.

வடக்குக் கிழக்கில் இயங்கிவருகின்ற ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு, இக்குழுவினர் எமது தாயகப் பிரதேசப் பகுதிகளிலிருந்து முற்றாக அகற்றப்படவேண்டும் என்பதே போர் நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்து 1.8 இல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுவதற்குப் பெரும் அச்சுறுத்தலாக இந்த ஆயுதக்குழுக்கள் அமைந்துவிடும் என்பதுடன் சமாதான சூழலைக் குழப்பும் நோக்கில் அவை செயற்பட்டுவிடும் என்பதையும் நோர்வே அனுசரணையாளர்களும் சிறிலங்கா அரசாங்கமும் ஏற்றுக்கொண்ட பின்னர்தான் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் சரத்து 1.8 சேர்க்கப்பட்டது. அவ்வாறிருந்தும், இன்று இப்படியானதோர் ஆயுதக் குழுவைப் படைத்தரப்பே உருவாக்கி பெரும் குழப்பங்களை ஏற்படுத்தி வருவதோடு எமது போராளிகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைவதை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். கடந்த மூன்றரை வருடங்களாகக் கட்டியெழுப்பப்பட்டுவந்த சமாதான சூழலைச் சீர்குலைக்கின்ற, அதேநேரம் நடைமுறையிலுள்ள யுத்த நிறுத்த சூழலை குழப்புகின்ற நடவடிக்கையாகத்தான் இராணுவப் புலனாய்வுப் பிரிவினதும் படைத்தரப்பினரதும் செயற்பாட்டை நாம் கருதுகிறோம்.

கடந்த யூன் 26ஆம் நாள் இடம்பெற்ற கண்ணிவெடித்தாக்குதல், எமது மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மீதான தாக்குதல், மட்டக்களப்பு நகர அரசியல் துறைப் பொறுப்பாளர் சேனாதி மீதான தாக்குதல் மற்றும் கடந்த 10ஆம் திகதி அன்று திருமலையில் இடம்பெற்ற தாக்குதல் என எமது போராளிகள் மீதான அனைத்துத் தாக்குதல்களும் சிறிலங்கா அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்தான் இடம்பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இச்சம்பவங்கள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்ட விதம், நடாத்தப்பட்ட இடம் மற்றும் ஏனைய காரணங்களை வைத்து நோக்கும்போது இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் சிறிலங்கா படையினருமே இவ்வனைத்துத் தாக்குதல் சம்பவங்களிலும் ஈடுபட்டுள்ளமை சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணமாகியுள்ளது.சிறிலங்கா சமாதான செயலகப் பணிப்பாளரின் கடிதத்தில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட முன்னர் நிலவிய போர்ச் சூழலில் இடம்பெற்ற சம்பவங்களையெல்லாம் சுட்டிக்காட்டியுள்ளார். இரண்டு தரப்பினருக்கிடையேயும் போர் நடைபெற்ற காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களை இரண்டு தரப்பினரும் சமாதான முன்னெடுப்புக்களில் ஈடுபட்டுள்ள இந்த சமாதான சூழலில் சுட்டிக்காட்டுவதும் விவாதிப்பதும் சிறந்ததல்ல என்பதோடு அது ஒப்பந்தத்திற்கு விரோதமானதோர் நடவடிக்கையாகவே நோக்கப்படுகிறது. அவ்வாறானால், யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் சிறிலங்காப் படைத் தரப்பினரால் கட்டவிழ்த்துவிடப்பட்ட தமிழ் மக்கள் மீதான வன்முறைகள், சிறிலங்கா படையினர் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதப் படுகொலைகள் என அனைத்தையுமே நாம் சுட்டிக்காட்டவேண்டிவரும். போர் நிறுத்த ஒப்பந்த விதிகளை நாம் சரியாகக் கடைப்பிடித்து நடப்பதால்தான் சிறிலங்கா கட்டுப்பாட்டுப் பகுதிகளினுள் அரசியல் பணியில் ஈடுபட்டுள்ள எமது போராளிகள் மீது சிறிலங்கா படையினரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர். போர்நிறுத்த ஒப்பந்த விதிகளின்படி, 'சிறிலங்கா கட்டுப்பாட்டுப் ப்குதியில் ஆயுதங்களின்றி அரசியல் பணிபுரியும் போராளிகள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு சிறிலங்கா அரசாங்கத்திற்கு உண்டு. அதேநேரம் இவ்வாறாக எமது போராளிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதைக் கண்காணிப்பது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் கடமையாகும். இதுபோன்றே எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வரும் சிறிலங்கா பிரதிநிதிகளினதும் சிறிலங்கா அதிகாரிகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு எமக்குண்டு. போர்நிறுத்த ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு, எமது போராளிகள் தமது உறவினர்கள் மற்றும் நண்பர்களைச் சந்திப்பதற்கு பிற மாவட்டங்களுக்குச் சென்றுவரவேண்டிய தேவையுள்ளது. அத்துடன் அரசியல் மற்றும் நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டுள்ள எமது போராளிகள் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் மற்றும் சந்திப்புக்களை மேற்கொள்வதற்காக அடிக்கடி கிளிநொச்சிக்கு வந்துசெல்லவேண்டிய தேவையுள்ளது. போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர்கூட போராளிகளின் இவ்வாறான பயணங்கள் எமக்கேயுரிய பிரத்தியேக வழிமுறைகளினூடாக சுமூகமாக இடம்பெற்று வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் இவ்வாறான எமது போராளிகளின் பயணங்களை போருக்குத் தயார்படுத்துவதற்கான பயணங்கள் என்றும் வன்முறையைத்தூண்டுவதற்கான நடவடிக்கைகள் என்றும் கூறி, சிறிலங்கா தரப்பினர் தேவையற்ற மாயையைத் தோற்றுவிக்க முயல்வது வருந்தத்தக்கது.

மேற்குறிப்பிட்டது போல, மிகவும் அவசியமானதும் தேவையானதுமான எமது போராளிகளினது பாதுகாப்பான பயணங்களை உறுதிப்படுத்தும் வகையிலேயே கடந்த 30 யூன் 2005 அன்று அனுப்பிய கடிதத்தில் சில யோசனைகளை நாம் முன்வைத்திருந்தோம். எமது போராளிகளின் பூரண பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமானால் எமது யோசனைகள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். நீண்ட நாட்களாக பயணங்கள் ஒழுங்குபடுத்தப்படாத நிலையில், எமது பயணங்களை மிக அவசரமாக ஒழுங்குபடுத்த வேண்டிய நிலை எமக்கு இருந்தமையினாலேயே நாம் ஓர் கால அவகாசத்தினை சிறிலங்கா தரப்பினருக்கு வழங்கியிருந்தோம். மாதத்தில் ஒருதடவைதான் பயணம் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும், பயணத்தின் போது குறிப்பிட்ட தொகைப் போராளிகள் மாத்திரமே பயணம் செய்ய வேண்டும் என்றும் சிறிலங்கா தரப்பினர் கட்டுப்பாடுகளைப் போடுவதை நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம். இதுவிடயத்தில் சிறிலங்கா தரப்பினரின் யோசனையானது ஏதோ ஒருவகையில் எமது போராளிகளின் பாதுகாப்பான பயணம் முடக்கப்படுவதற்கே வழிவகுக்கும் ஒன்றாகவே எமக்குத் தெரிகிறது.

ஆகையால், நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் தீர ஆராய்ந்து எமது போராளிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நாம் கடந்த யூலை 30 2005 அன்று அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்ட யோசனைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு கூடிய விரைவில் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நாம் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறாக நடவடிக்கைகளை எடுப்பதில் மேலும் கால தாமதங்கள் ஏற்படுமானால் நாம் ஏற்கனவே கூறியதைப் போன்று எமக்கேயுரிய பாதுகாப்பான பயண வழிமுறைகளைக் கைக்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம் என்பதை உறுதியுடன் கூறிக்கொள்கிறோம். அவ்வாறானதொரு நிலை ஏற்படுமானால் சிறிலங்கா தரப்பினர் எமது பாதுகாப்புடன்கூடிய போராளிகளினது பயணங்களைத் தடுக்காது இருக்கவேண்டும். மாறாக தடுக்கும் நிலை ஏற்படும் சந்தர்ப்பத்தில் நாம் அதற்கான தகுந்த பதில் நடவடிக்கையை எடுக்கவேண்டிய சூழ்நிலையை உருவாக்கும். இந்நிலைமை யுத்த நிறுத்த உடன்படிக்கையை மிகவும் சிக்கலான நிலைமைக்குள் தள்ளிவிடும் என்று நாம் அஞ்சுகின்றோம்.

நன்றி

இவ்வண்ணம்,
பொறுப்பாளர்,
அரசியல்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்

(ச-04)

# சமய ஒழுக்க விழுமியங்களை மதித்துநடந்து மாணவர்கள் ஒழுக்க சீலர்களாகத் திகழவேண்டும்

## - சைவப் புலவர் எஸ்.நவரத்தினம்

(பருத்தித்துறை)

'மனிதன் சமய வாழ்க்கை வாழும்போது வாழ்க்கையில் இன்பத்தை அனுபவித்து வாழ்க்கையின் இலட்சியத்தை அடைய முடியும். மாணவர்கள் சமய ஒழுக்க விழுமியங்களை மதித்து நடந்து ஒழுங்க சீலர்களாகத் திகழவேண்டும்'.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை நவோதய பாடசாலை வார ஆரம்ப விழாவிலே விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் எஸ்.நரத்தினம் இவ்வாறு குறிப்பிட்டார்.

விழா பிரதி அதிபர் திருமதி. இந்திராணி ஸ்ரீரங்கன் தலைமையில் நடைபெற்றது. பிரதி அதிபர் விழாவை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது,

கல்வியமைச்சின் நவோதய பாடசாலைத்திட்டம் மாணவர்களின கல்வி அபிவிருத்தி மேம்பாடுகளுக்குச் சிறப்பாக வழிவகுக்கின்றது. மாணவர்களது திறமைகள் பாராட்டப்படும் போது அவர்கள் ஊக்குவிக்கப்பட்டு முன்னணியில் திகழ்வார்கள்.

நவோதய பாடசாலை வாரத்தின் இவ் வருட மகுடவாசகமாக "மாணவர்களின் திறமைகளைப் பாராட்டுவோம்" என்பது மிகச் சிறந்ததாகும்.

நவோதயப் பாடசாலை வாரத்திலே, நவோதயப் பாடசாலைகளின் அபிவிருத்தி சம்பந்தமாகப் பாடசாலைச் சமூகத்திற்கு விளக்கமூட்டல், பாடசாலைச் சமூகத்திற்கு இடையே நெருங்கிய உறவை ஏற்படுத்தி சமூகப் பங்கேற்புடன் கல்வி அபிவிருத்தியை உயர் மட்டத்திற்குக் கொண்டு வருதல், மாணவர்களின் திறமைகளை மதிப்பீடு செய்தல், மாணவர்களின் செயற்பாடுகளுக்கு அதிக சந்தர்ப்பம் வழங்கல் போன்ற பாடசாலை வளர்ச்சிக்காக மேற்கொள்ளக் கூடிய விசேட செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவுள்ளன.

சமய ஒழுக்க விழுமியங்களை அதிகரிப்பதற்கான விரிவுரைகள், பாடசாலைச் சமூகத்திற்கு அவசியமான வேலைத்திட்டங்கள், மாணவர்களின் பேச்சு, விவாதம், இயல், இசை, நாடகம், போட்டிகள, இணைச்செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தல், மாணவர்களின் கணித, விஞ்ஞானச் செயற்பாடுகளை மதிப்பீடு செய்தல், மாணவர்களின் ஆர்வத்தை விருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள், அழகியற் கல்வியில் மாணவர்களின் ஆக்கம் மதிப்பீடு செய்தல் ஆகியன இவ் நவோதய வாரத திலே மேற்கொள்ளப்படவுள்ளன.

இம் முதல் நாள் ஆரம்ப விழாவிலே மாணவர்களின் 'வாழ்க்கையில் சைவம்' பேச்சு, 'உண்மை ஒன்று சொல்வேன்' கவிதை, 'மனுநீதி' நாடகம் உட்பட இன்னும் பல நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.(ற-52)

## மின் அலகு அளவீட்டு மானி பொருத்தப்படவில்லை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மின்சாரசபையால் புதிதாக வழங்கப்படும் மின் இணைப்புகளுக்கு மின் அலகு அளவீட்டு மானி பொருத்தப்படாது ஓர் நிலையான கட்டணத்தினை அறவிடுவதனால் தாம் பாதிக்கப்படுவதாகப் பொதுமக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

அலகு அளவீட்டு மானி பொருத்தப்பட்ட இரண்டு, மூன்று பல்ப் எரியவிடும் வீடுகளுக்கு மாதாந்தம் 75 ரூபா முதல் 150 ரூபா வரை கட்டணம் அறவிடும்போது அதேயளவில் மின்னைப் பயன்படுத்தும் புதிய இணைப்பினைப் பெற்றுக் கொள்வோர் அதிகரித்த தொகையினை ஓர் நிலையான கட்டணமாகச் செலுத்த வேண்டியுள்ளது.

இதனால் தம் மீது செலவினை அதிகப்படுத்துவதாக மின்சார சபை மீது மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். எனவே இதுகுறித்து உரிய அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமெனப் பொதுமக்கள் கோருகின்றனர். (க-21)

## பதவி யுயர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலய பருத்தித்துறைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் கல்வி அமைச்சினரால் பதவி உயர்ததப்பட்டு வடமராட்சி வலயக் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ற-52)

# பாவனையாளர் பாதுகாப்புச் சட்ட ஏற்பாடுகள் பாவனையாளர் அதிகார சபைச் சட்டத்தின் கீழ்

(யாழ்ப்பாணம்)

உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தின் செயற்பாடுகள் தற்போது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கீழ் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. முன்னர் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வர்த்தகர்கள் பின்பற்றி வந்த நடைமுறைகள் யாவும் தற்போது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளன.

முன்னர் யாழ்.செயலகத்தில் உள்நாட்டு வர்த்தகப் பரிசோதகர்களாகக் கடமை புரிந்த அலுவலர்கள் தற்போது பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரிகளாக செயற்பட்டு வருகின்றனர்.

சகல வர்த்தகர்களும் விலைப் பட்டியல், விலைத்துண்டு, அறிவித்தற்பலகை முதலியவற்றை வியாபார நிலையங்களில் வாடிக்கையாளர் பார்வைக்காக வைக்க வேண்டும.

அததுடன் பொருட்கள பொதி செய்து விற்கப்படுமிடத்து உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி, விலை என்பன குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுபவர்களும், பாவனையாளர்களைப் பாதிக்காத வகையில் பாவனையாளர் அதிகாரசபைச் சட்டத்தை அனுசரித்து நடக்க வேண்டும். சட்டத்தை மீறி நடக்கும் வர்த்தகர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தரப்பட்டுள்ளது. (து-19)

# நிரந்தர சமாதானம் விரைவில் ஏற்படும் மால்ரன் வோல்ஸ்ரம் பூரண நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கையில் மிகவிரைவில் நிரந்தர சமாதானம் ஏற்படும் எனத் தான் பெரும் நம்பிக்கை கொண்டிருப்பதாக ஐரோப்பிய ஆணைக் குழுவின் உபதலைவி மால்ரன் வோல்ஸரம் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதத்தை உலகில் இருந்து இல்லாமல் செய்வதற்குப் பல்வேறு சமூகத்துடன் இணைந்து நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் கடந்த புதன் கிழமை மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஐரோப்பிய ஒன்றிய உபதலைவி இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் என்பவற்றைப் பாதுகாப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. சகல நாட்டிலும் ஜனநாயகம் நிலை கொண்டிருக்க வேண்டியது கட்டாயமானது.

அத்துடன், ஜனநாயக ரீதியில் ஒரு நாட்டில் தேர்தல் ஒன்று நடைபெறும் போது அவற்றைக் கண்காணிப்பதற்குத் தமது அமைப்புப் பிரதிநிதிகளை நியமிக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (க-2)

# இராசி பலன்

16.07.2005
(ஆனி 32, சனிக்கிழமை)
தசமி பின்னிரவு 3.12 மணிவரை
சுவாதி முற்பகல் 8.54 மணிவரை
இராகுகாலம் 9.00 - 10.30 மணிவரை
சுபநேரம் 3.00 -4.30 மணிவரை
அமிர்த சித்தம்

| | |
|---|---|
| மேடம் | தேகநலன், செய்தொழில் விருத்தி, நல்ல வரவேற்பு, முயற்சி கைக்கூடும். |
| இடபம் | காரிய அனுகூலம், சுவாரஸ்யம், நல்ல தகவல், போசன சுகம். |
| மிதுனம் | சிறுவியாதி, காரிய இடையூறு, மனச் சோர்வு, பூர்வபுண்ணிய கருமம். |
| கடகம் | உடல் நலக் குறைவு, புதிய முயற்சி, மனப் பயம், சுபசெலவு. |
| சிங்கம் | பிரயாண நன்மை, அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, காரிய நன்மை. |
| கன்னி | அதிகாரம், பண விரயம், விவாதம், காரிய இடையூறு. |
| துலாம் | நண்பர்கள் உதவி, புதிய முயற்சி, கற்பனை மிகுதி, அறிஞர்கள் சந்திப்பு. |
| விருச்சிகம் | வீண் அலைச்சல், ஆரோக்கியக் குறைவு, வேலையில் ஆர்வம், நித்திரைக் குறைவு. |
| தனுசு | கீர்த்தி, உறவினர் வழிநன்மை, விருந்துபசாரம், எடுத்த காரியம், கைகூடும். |
| மகரம் | தொழில் நன்மை, பிறர் உதவி, முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை. |
| கும்பம் | பித்த ரோகம், நல்ல முயற்சி, கட்டுப்பாடு, திடீர் பயணம். |
| மீனம் | நண்பர்கள் விரோதம், போசன சுகம், முயற்சி தடங்கல், மனக்கவலை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

# வட்டி வீதத்தை மாற்றாமல் பேண மத்திய வங்கி தீர்மானித்துள்ளது

(கொழும்பு)

தற்போதைய வட்டி வீதங்களைத் தொடர்ந்து மாற்றாமல் பேணுவது என மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

நாட்டின் பொருளர்தார முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக மத்திய வங்கி கூறுகின்றது.

பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் தொடர்ச்சியாகப் பேணப்படும் பின்னணி தென்படுகின்றது.

ஏற்றுமதி வருவாய் 11.4 வீதத்தால் மேம்பட்டிருக்கிறது. ஏற்றுமதியை விட இறக்குமதி குறைந்திருப்பதால் வர்த்தகத் துறையும் முன்னேறியிருக்கிறது.

கடந்த பெரும்போகத்தில் நெற்செய்கையில் அமோக விளைச்சல் கிட்டியிருப்பதால் சிறுபோகத்திலும் அதிகளவு நெல் அறுவடை செய்யப்படும் என மத்திய வங்கி எதிர்பார்த்திருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியம் வழங்கவுள்ள வரி நிவாரணங்கள் காரணமாக ஆடை உற்பத்தித் துறையிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்படக்கூடும் என மத்திய வங்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (க-2)

# தொட்டிக்குள் இருந்த மீன் வாய்க்குள் சிக்கியதால் எட்டு வயதுச்சிறுவன் மரணம்

(கொழும்பு)

தொட்டியில் இருந்த மீன் வாயில் சிக்கிக் கொண்டதால் மூச்சுத்திணறி 8 வயதுச் சிறுவன் உயிரிழந்தான். இச்சம்பவம் மலேசியாவில் ஒரு கிராமத்தில் இடம் பெற்றுள்ளது.

சாமியம் அகமது என்ற 8 வயதுச் சிறுவன் பக்கத்து வீட்டில் இருந்த மீன் தொட்டியில் மீன்களுடன் விளையாடிக் கொண்டிருந்த சமயம் உள்ளங்கை அளவு மீனை அச்சிறுவன் பிடித்து விளையாடிய போது அது துள்ளிக் குதித்து அவனது வாயில் புகுந்துகொண்டது.

இதனையடுத்து, அச்சிறுவனுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. அச்சிறுவனின் தாய் அவனது வாயில் புகுந்துகொண்ட 7 சென்ரிமீற்றர் நீளமும் 4 சென்ரிமீற்றர் அகலமும் கொண்ட மீனை வெளியில் எடுக்க முயற்சித்தார்.

ஆனால் முயற்சி பயனளிக்கவில்லை. உடனடியாக அச்சிறுவனை டாக்டரிடம் அழைத்துச் சென்றனர் ஆனால் அச்சிறுவன் இறந்துவிட்டதாக அவர் தெரிவித்தார். (க-2)

# மஹோற்சவம்

கரணவாய் வடக்கு மூத்த நயினார் ஆலய மஹோற்சவம் கடந்த 12 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

பத்துத்தின விழாக்களில் எதிர்வரும் 20 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (க-21)

# அரச திணைக்களங்களில் பணிபுரியும் 32000 பேருக்கு நிரந்தர நியமனம்!

(கொழும்பு)

அரசாங்கத் திணைக்களங்களில் நிரந்தரமற்ற ஊழியர்களாகக் கடமையாற்றிய 32 ஆயிரம் பேருக்கு நிரந்தர நியமனங்களை வழங்க அரசாங்கத்தின் அனுமதி கிடைத்துள்ளதாக பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலே இதற்கான இணக்கம் பெறப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி சேவையிலிருந்து 180 நாட்களைப் பூர்த்தி செய்திருத்தல், அவர்கள் கடமையாற்றும் அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது நிறுவனத்தில் வெற்றிடம காணப்படுகின்றமை, அந்த வெற்றிடத்தைப் பூர்த்தி செய்வதற்கு அடிப்படைத் தகைமையைப் பெற்றிருத்தல் ஆகிய 3 முக்கிய விடயங்கள் பற்றி விரிவாகப் பேசப்பட்டது.

கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கம் இந்த ஊழியர்களை நிரந்தரமாக்கும் விடயத்தில் 2 ஆண்டுகளில் இழுத்தடித்து சென்றுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (க-9)


# உடன் விற்பனைக்கு உண்டு

**பின்வரும் பொருட்கள் விற்பனைக்கு உண்டு**

- ஒவ்செற் பிளேற் (பாவித்தது)
- ஈய எழுத்துக்கள் மற்றும் ஈய லெற்றுகள் (புதியது)
- புத்தகம், கொப்பி என்பவற்றிற்கு கிளிப்பிடும் மெசின் (அச்சகங்களுக்குரியது, சிறிய திருத்தம் உண்டு)
- சிறிய ஜெனறேற்றர்
- ஈய எழுத்துக்கள் வைக்கப்படும் கேஸ் (பலகையினாலானது)
- கோழிக்கூடுகள் மற்றும் கதிரைகளுக்கான பாலைத்தடிகள்
- வெற்றுப் பைவர்கள் (6 லீற்றர்)

**மலிவான விலையில் வழங்கப்படும். பார்வையிடும் நேரம் தினசரி மாலை 4.00 மணிக்குப் பின்னர்.**

தொடர்பு:-
விற்பனை முகாமையாளர்
வலம்புரி
இல 3, 2ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்)

# இன்று ஒரு தகவல்

## அலுவலக அரட்டைகள்

நீண்ட நாட்களுக்குப் பின் ஒரு நண்பரைச் சந்தித்தேன். "உங்களுடன் உட்கார்ந்து கொஞ்சநேரம் அரட்டை அடிக்க வேண்டும் போல் ஆசையாக இருக்கிறது" என்றேன். அப்படியென்றால் நேராக எங்கள் அலுவலகத்திற்கு வந்துவிடுங்கள் அதுதான் வசதி என்றார்.

இப்படி அரட்டை அடிப்பதற்கு அலுவலகம் தான் வசதியான இடம் என்று நினைப்பவர்கள் பலபேர் உண்டு. அவர்களுக்கெல்லாம் கூடிய விரைவில் ஒரு இடைஞ்சல் வந்து சேரும் போலிருக்கிறது. கைக்கு அடக்கமாக பிஸ்கட் வடிவத்தில் இரண்டு அங்குல அகலத்தில், சதுர வடிவத்தில் ஒரு கருவி தயார் செய்திருக்கின்றனராம். இது அரட்டை அடிப்பவர்களையெல்லாம் கண்டுபிடித்துவிடுமாம்.

**Infra red rays** எனப்படும் அகச்சிவப்புக் கதிர்களினால் இது இயங்குகிறது. அலுவலகத்தில் வேலை செய்பவர்களின் சீருடையில் இந்தக் கருவியைப் பொருத்திவிட வேண்டியது. அல்லது பையில் கூட வைத்திருக்கலாம். ஒவ்வொருவருடைய கருவிக்கும் ஒரு நம்பர் உண்டு. ஒவ்வொன்றும் வெவ்வேறு சமிக்ஞைகளை அனுப்பும். இதை ஒரு கணனி பதிவு செய்து கொள்ளும். அந்த ஊழியர் எங்கே போனாலும் அதை இது பதிவுசெய்து கொண்டேவரும். விறாந்தையில் இருக்கிறாரா? கன்டீனில் இருக்கிறாரா? பாத்ரூமில் இருக்கிறாரா? எல்லாம் பதிவாகிவிடும்.

பல ஊழியர்கள் ஒரே இடத்தில் கூடி கும்பலாக இருந்தாலும சரி அலுவலகத்திற்குள்ளேயே யாரும் போகக் கூடாத முக்கியமான. இடத்திற்கு ஒருவர் இரகசியமாகப் போனாலும் சரி... கணனி காட்டிக்கொடுத்துவிடும். மேல் நாடுகளில் பல அலுவலகங்களில் இதை இப்போது பயன்படுத்துகின்றனராம். இந்தக் கருவியை அணிந்திருப்பவர் தனக்குரிய இருக்கையில் அமர்ந்தவுடன் அவரது மேசையிலுள்ள கணனி அவரது வருகையைப் பதிவுசெய்து கொள்ளும்.

சரி... இந்தக் கருவியை யாருக்கும் தெரியாமல் வெளியே வைத்து விட்டு ஏமாற்றி விடலாம் என்று நினைத்தாலும் அது முடியாது. நமது ஊருக்கு இந்தக் கருவி வந்தால் நல்லது தான். அலுவலகத்தில் வேலை செய்யாமல் அடுத்தவர்களின அறைக்குப் போய் அரட்டை அடிப்பது. இரகசியக் கோப்புகள் வைத்திருக்கும் அறைகளுக்குள் போய் நோட்டம் பார்ப்பது இதையெல்லாம் கட்டுப்படுத்திவிடலாம். சிலபேர் வேண்டுமென்றே வேலை நேரம் பார்த்து பாத்ரூம் எங்கே இருக்கிறது என்று தேடிப் போய் விடுவது உண்டு. அவர்களையெல்லாம் இது சுலபமாகக் கண்டுபிடித்து தேடிப்போய் விடுவதுண்டு. அவர்களையெல்லாம் இது சுலபமாகக் கண்டுபிடித்துச் சொல்லிவிடும்.

இந்தக் கருவியினால் வேறு சில நன்மைகளும் உண்டு. ஒரு பெரிய அதிகாரியின் அறைக்குள் குறிப்பிட்ட சிலர்தான் நுழைய வேண்டும். என்று வைத்துக்கொள்ளுங்களேன். அதற்குத தகுந்த மாதிரி செட்பண்ணி வைத்துக்கொள்ளலாம். அப் படி வைத்துவிட்டால் அந்தக் குறிப்பிட்ட சிலர் தான் அந்தக் கதவைத் திறக்க முடியும். அதேபோல் பணம்,நகை போன்றவிலை உயர்ந்த பொருட்கள் உள்ள அறைக்குள் குறிப்பிட்ட ஒரு சிலர் மட்டுமே போய்வருவது போல் செய்து கொள்ளலாம்.

இப்போது பிரிட்டனில் பல இடங்களில் இந்தக் கருவியை சோதனை முறையில் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்களாம். வயதானவர்களுக்கும் நோயாளிகளுக்கும் ஆபத்து வேளையில் உதவி செய்வதற்கும் இந்தக் கருவியைப் பயன்படுத்தலாம்.

இப்போதெல்லாம் அலுவலகத்தில் வேலை செய்வபவர்கள் எவ்வளவு விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள் தெரியுமா?

அன்று ஒரு நாள் அப்படித்தான் சார் ஒரு அலுவலக நண்பரைப் பார்த்து "இன்று என்ன திகதி சார்?" என்றேன். "சரியாக நினைவில்லை சார்" என்றார். அதுதான் கையில் தினசரிப் பத்திரிகை வைத்திருக்கிறீகளே! அதைப் பார்த்தால் தெரியுமே என்றேன். அது எப்படி சார் தெரியும்? இது நேற்றைய பத்திரிகையாயிற்றே என்கிறார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தேசியமட்ட கனிஷ்ட பிரிவுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

## யாழ்.அணி நேற்று குருநாகல் பயணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்படுகின்ற தேசிய மட்ட கனிஷ்ட பிரிவிற்கான வலைபந்தாட்ட சுற்றுப்போட்டி இன்றும் நாளையும் குருநாகல் மலேகபிட்டிய விளையாட்டு மைதானத்தில நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்வதற்காக யாழ். மாவட்டத்திலிருந்து சுகிந்தா தில்லைநாதன், பிரிந்தா சோமசுந்தரம், மயூரி கந்தசாமி, மேனகா அமிர்தலிங்கம், கௌசிகா சோமசுந்தரம், நிசாந்தி குலசேகரம், மயூதினி குணரட்ணம், மேனகா சிதம்பரநாதன், சிறிகாயத்திரி திருநாவுக்கரசு, மைதிலி ராஜரட்ணம், யசோதா இராஜதுரை, தயானி செபஸ்ரியாமபிள்ளை ஆகிய வீராங்கனைகள் அடங்கிய அணியும் அணி முகாமையாளர் திருமதி என்.தர்மகுலசிங்கம், பயிற்றுவிப்பாளர் ஏ. எவ்.ஜே. ரூபசிங்கம்,உதவிப் பயிற்றுவிப்பாளர் ரெமீன்ராஜோன் விக்ரர் ஆகியோரும் நேற்று குருநாகல் சென்றுள்ளார்கள். (ந-19)

# ஆங்கில மருந்துப் பொருட்கள் அனைத்தும் 15% இலாபத்திற்கு மேல் விற்பதற்குத் தடை

## மீறின் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சகல ஆங்கில மருந்துப் பொருட்களும் நிர்ணயம் செய்த விலைக்கு அதாவது 15 வீத இலாபம் வைத்து விற்கப்படவேண்டும் எனவும் 15 வீதத்துக்கு குறைவாக மருந்துப் பொருட்களை விற்பனை செய்யும் மருந்தகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வட பிராந்திய யாழ். ஆங்கில மருந்துவணிகர் மன்றம் அறிவித்திருந்தது.

இதனால் பாவனையாளர்களே பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதனால் இது தொடர்பாக ஆராயும் கூட்டம் ஒனறு நேற்று முன்தினம் காலை யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

இககூட்டத்தில் வட பிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தின் பிரதிநிதிகள மற்றும் மருந்தகங்களின் உரிமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இக கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள மருந்தகங்களில் விற்பனை செய்யப்படும் மருந்துப் பொருட்கள் நிர்ணயம் செய்த விலைக்கு அதாவது 15வீதத்துக்கு மேலதிக இலாபம் வைத்து விற்கப்படக கூடாது எனவும் இவ்வாறு 15வீதத்துக்கு மேல் இலாபம் வைத்து விற்பனை செய்யும மருந்தாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுககப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன்,சில மருந்தகங்களில் மருந்துப் பொருட்கள் 15வீதத்துக்குக் குறைவாக இலாபம் வைத்து விற்பனை செய்யப்பட்டால் அதை வட பிராந்திய யாழ். ஆங்கில மருந்துவணிகா மன்றம் தடைசெய்ய முடியாது எனவும் மருந்து உரிமையாளர்கள் விரும்பினால் பாவனையாளர்களது நன்மை கருதி மருந்துப் பொருட்களை 15 வீதத்திற்குக் குறைவான இலாபம் வைத்து விற்பனை செய்யமுடியும எனவும் இதற்கு தடை எதுவும் இல்லை எனவும் எடுத்துக்காடடப்பட்டது. (ந-19)

## மேஜர் முத்தலிப் கொலைச் சம்பவம்;

# பத்திரிகையாளர் சஞ்சீவவுக்கு ஜூலை 28வரை விளக்கமறியல்

(கொழும்பு)

கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளையிடும் அதிகாரி லெப் கேணல் நிஸாம் முத்தலிப்பின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட பத்திரிகையாளர் இந்திரகொல விதார சஞ்சீவவை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடபபட்டுள்ளது.

ஐககிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவைச் சேர்ந்தவர் என சந்தேகிக்கப்படும் இச் சந்தேக நபர் மற்றைய சந்தேக நபர்களான ஆறுமுகம் செந்தில்குமாா, கருணாரட்ண ஆகிய இருவருடன் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்குச் சென்று வந்துள்ளதாக் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொழும்பு மேலதிக மஜிஸ்திரேட் ஹிகான் பலபபிட்டிய முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுததுக் கொள்ளப்பட்ட போதே இம் மாதம் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவடப்பட்டுள்ளது.

அதேவேளை,கொலையுடன் தொடர்புடையதாக சநதேகிக்கப்படும் மேலும் மூன்று சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவில்லை. (ந-8)

# ஞாயிறன்று ரயில்சேவை நிறுத்தம்

## ரயில் சாரதிகள் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ரயில் சாரதிகள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து நாளை மறுதினம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தெரியவருகிறது.

சாரதிகளுக்கான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாமை மற்றும் இயந்திர உபகரணங்கள் பற்றாக் குறை போன்றவற்றை தீர்க்கக் கோரியே இவ்வேலை நிறுத்தப் போராட்டம் இடம்பெறவுள்ளதாக ரயில்வே ஊழியர்களின் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

ரயில்வே திணைக்களத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக கடந்த இரண்டு வருடங் களாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வந்தபோதிலும் இதுவரை எந்த விதமான தீர்வும் கிடைக்கப்பெறாத நிலையில் கடந்த மே மாதம போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ்பெரேராவுடனும் பேச்சுவார்த்தை நடத்திய போது ரயில்வே திணைககளத்தில் நிலவுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதாக அமைச்சர் உறுதியளித்தார். இருப்பினும் இதுவரை எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என றும் மேற்படி தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் நாளை மறுதினம் முதல் ரயில சாரதிகளின் சங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-9)

# இந்து மாமன்ற பொன்விழா நிகழ்வு

## இரண்டாம் நாள் நிகழ்வில் அறிஞர்கள் உரை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொன்விழாவையொட்டி அகில இலங்கை இந்து மாமன்றமும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து யாழ். தேசிய கல்வியற் கல்லூரியில் காலை 9.00 மணி தொடக்கம் 10.30 மணி வரை நடத் தும் இந்து மாநாட்டின் 2ஆம் நாளான இன்றைய வழிபாட்டு நோக்கில் அமாவு-1 சிறப்பு அமர்வு திருமதி நா.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும். அமர்வு-1இல் "ஈழத்து இந்து மதத்தில் விநாயக வழிபாடு" எனும் தலைப்பில் திருமதி ஜெ.உதயகுமாரும், "ஈழத்து இந்து மதத்தில் முருகன வழிபாடு" எனும் தலைப்பில் திருமதி நா. கணேசநாதனும், "ஈழத்தில் சிவ வழிபாடு" எனும் தலைப்பில் ஆ. சபாரத்தினமும்,"யாழ்ப்பாணத்தில் விஷ்ணு வழிபாடு" எனும் தலைப்பில் திருமதி விக்னேஸவரி பவநேசனும் உரை நிகழ்த்தவுள்ளனர்.

வாழவியல் நோக்கில் அமர்வு-2 பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறும. "ஈழத்து இந்து வழிபாட்டு மரபில் பெண்மை" என்னும் தலைப்பில் கலாநிதி ம.சண்முகதாஸும், "ஈழத்தில் கந்த புராண கலாசாரம்" எனும் தலைப்பில் ஆறுதிரு முருகனும், "இந்து நேர்த்திக் கடன்களும் உளவியலும்" எனும் தலைப்பில் திருமதி கோகிலா மகேந்திரனும், "இந்து மதம் எதிர்நோக்கும் சவால்கள்" எனும் தலைப்பில் பிரதிக்கல்விப்பணிப்பாளர் கு. சண்முகநாதனும் உரையாற்றவுள்ளனர்.

பேராசிரியர் ம.சண்முகதாஸ் தலைமையில் இடம் பெறும் வழிபாட்டு நோக்கில அமர்வு-3 இல் 'ஈழத்து இந்து மதத்தல் வைரவர் வழிபாடு' எனும்தலைப்பில் திருமதி கௌரி சுரேசனும், 'ஈழத்து இந்துமதத்தில் ஐயனார் வழிபாடு" என்னும் தலைப்பில் திருமதி ஜெ.தியாகலிங்கமும், "ஈழத்து இந்து மதத்தில் அனுமான் வழிபாடு" எனும் தலைப்பில் திருமதி செ.சிவபாதமும், "யாழ்ப்பாணத்தில் விஷ்ணு வழிபாடு" எனும் தலைப்பில் பேராசிரியர் செ.கிருஷ்ணராஜாவும் உரை நிகழ்த்தவுள்ளனர்.

திருமதி ம.திருச்சிற்றம்பலம் தலைமையில் இடம்பெறும் வாழ்வியல் நோக்கில் அமர்வு-4 இல் "ஈழத்து இந்து மதமும் உணவும்" எனும் தலைபபில் டாக்டர் சி. சிவசண்முகராசாவும், "இளைஞர் நோக்கில் இந்து மதம்" எனும் தலைப்பில் செல்வ மனோகரனும், "ஈழத்து இந்து ஆலயங்களில் விக்கிரகப் பிரதிஷ்டை: சில மரபுகள் என்னும தலைப்பில் பேராசிரியர் ப. கோபாலகிருஸ்ண ஐயரும் உரையாற்றவுள்ளனர்.

கலாநிதி இராமநாதன் தலைமையில் நடைபெறும வழிபாட்டு நோக்கில் அமர்வு-5இல் "ஈழதது கண்ணகி வழிபாடு" எனும் தலைப்பில் கலாநிதி மா. ரகுநாதனும்,'ஈழத்துச் சந்நிதி வழிபாடு" எனும் தலைப்பில் நா. செல்வநாயகமும், "ஈழத்து சிறு தெய்வவழிபாடு" எனும் தலைப்பில் கலாநிதி பொ.இரகுமதியும் உரைநிகழ்த்துவர். பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயரின் தலைமையில் நடைபெறும் வாழ்வியல் நோக்கில் அமர்வு -6இல "தனித்துவமான யாழ்ப்பாணத்து இந்து சமய நம்பிக்கைகள்" எனும் தலைப்பில் பேராசிரியர் அ. சண்முகதாஸும், "ஈழத்துச் சமூகக்கட்டமைபபில் இந்துமதத்தின் பங்களிப்பு" எனும் தலைப்பில் பேராசிரியர் நா. சண்முகலிங்கமும், "ஈழத்து இந்து ஆலய கொடைமரபும் சமூகநோக்கும் "எனும தலைப்பல் பேராசிரியர் வி. நித்தியானந்தனும், "மக்கள் தொணடும் சிவதொண்டர் அணியும் "எனும் தலைப்பில் க. ராஜபுவனீஸவரனும் உரைகளை நிகழ்த்தவுள்ளனர். (து-2)

# சமூக விரோதச் செயல்களை தடுக்க விழிப்புக் குழுக்கள் அவசியம்

## அரச அதிபரின் ஆலோசனை

சமூக விரோத குற்றச்செயல்களை ஒவ்வோர் கிராமசேவையாளர் பிரிவுகளிலும் விழிப்புக்குழுக்களை அமைப்பதன் மூலம் ஓரளவு கட்டுப்படுத்தலாம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை திருமதி எஸ்.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டபோதே அரச அதிபர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இரவுவேளைகளில் பல திருட்டுச் சம்பவங்கள் மற்றும் களவாக மண் அகழ்தல், சட்டவிரோத மதுப்பாவனை மற்றும் கசிப்பு உற்பத்தி போன்றவை நடைபெறுவதாக சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகளும் கிராமசேவையாளர்களும் எனது கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

இரவு நேரம் வீதிகளில் வீதி விளக்குகள் இல்லாமை, திருட்டுக்கு சாதகமாக அமைந்துவிடுகிறது என்று கூறினார்.

தொடர்ந்து அரியாலைப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி தொடர்பாகவும், இப்பகுதியில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் மக்கள் அனுமதி பெறாமல் குழாய்க்கிணறுகள் அமைத்து வருவதால் பல்வேறு பாதிப்புகள் ஏறபடும் அபாயம் உளளது எனவும் சம்பந்தப்பட்ட பிரதேச சபையினூடாக விண்ணபித்து தேசிய நீர் வழங்கல் அதிகாரசபையின அனுமதிபெற்ற பின்னரே குழாய்க்கிணறுகள் அமைக்கவேண்டும் என்றும அரச அதிபர் சுட்டிக்காட்டினார். அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்புத்திட்டம் மற்றும் போஷாக்கு செயற்திட்டங்கள், உள்ளூராட்சி மன்ற கழிவகற்றும் பிரச்சினைகள், மின்சாரம் வழங்கவேண்டிய பிரதேசங்கள் போன்ற பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டு தீர்வுகளும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, ஈழவேந்தன் ஆகியோரும் கலந்துகொண்டு பல்வேறு பிரச்சினைகளிற்குத் தீர்வுகளை முன்வைத்தனர். இக்கலந்துரையாடலில் பல்வேறு திணைக்களங்களிலிருந்து சுமார் 50க்கும் மேற்பட்ட பிரதிநிதிகளும் கிராம சேவை அதிகாரிகள் மறறும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள். (து-252)

# பாதயாத்திரை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

மீள் குடியமர்வுக்கு அனுமதி கோரி யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாதயாத்திரை சீரற்ற காலநிலையால் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மருதனார்மடம் சந்தியிலுள்ள ஆஞ்சநேயர் முன்றலில் இருந்து அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்வரை இந்தப் பாதயாத்திரையை நடத்துவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

இடம்பெயர்ந்தோர் நலன்புரி அமைப்புக்களின் ஒன்றியத்தினால் இப்பாதயாததிரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரு-9)

# சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு; காரைநகரில் அடிக்கடி மின் தடை

## பொதுமக்கள் கடும் விசனம்

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக இரவு வேளை மின்சாரம் தடைப்பட்டு வருவதாக மின் பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொருநாளும் மாலை 7.00 மணியளவில் மின்சாரம் தடைப்பட்டு வருவதுடன் வலுக்குறைந்த மின்சாரமே கிடைப்பதாகவும், இரவும் பத்து மணிக்குப்பின்னர் முற்றாகவே மன்சாரம் தடைப்படுவதுடன் அடுத்த நாள் காலை ஒன்பது மணிக்குப் பின்னரே மின்சாரம் கிடைப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலை கடந்த ஒருவாரமாக தொடர்ந்து வருகின்றது. இதனால ஐஸ் வியாபாரிகளும், ஐஸ்கிறீம் வியாபாரிகளும் நஷ்டமடைந்து வருகின்றனர்.

இதற்குச் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுவதே காரணம் என பலரும் குற்றம்சாட்டியுள்ளதோடு, இதுபற்றி மின்சார சபைக்குத் தெரிவித்தும் சட்டவிரோத மின்சாரத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்காதது பற்றியும் பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (ரு-246)

# நிறைவான விடுதலையைப் பெற்றுக்கொள்ள பொருளாதாரத்தில் தனனிறைவு அவசியம்

## -தமிழீழ பொருண்மியப் பொறுப்பாளர் கரிகாலன்

(கிளிநொச்சி)

போர்ச்சூழல் மீண்டும் எம்மை நெருங்கி வருவதாக உணர்கின்றோம். அநதச் சூழ்நிலையில் எமது மண்ணில் தரிசு நிலங்களாக உள்ள இடங்களில் பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு விடுதலைப் போராட்டத்தையும், பொருளாதார பலத்தையும் காப்போம் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் தொவித்துள்ளார்.

நேறறு முன்தினம் கிளிநொச்சி அக்கராயன் கண்ணகைபுரத்தில் இடம்பெற்ற வயல்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவா அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மிக நெருக்கடியான போர்ச் சூழலிலும நாங்கள எல்லோரும உழைத்து மக்களைக்காத்து விடுதலைப் போராட்டத்திற்கு பக்க பலமாக இருந்துள்ளோம்.

தமிழீழத் தேசியத்தலைவர் தமிழர் தயாகத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்குடன் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

போர இடம்பெற்ற காலங்களில் போரை புரிந்தபடியே எமது மண்ணில் விவசாயத் துறைகளைக் கட்டியெழுப்பி, மக்களும் போராளிகளும் பட்டினியை எதிர்கொள்ளாமல் நிறை வான நிலையில் சண்டைகள் பிடித்தோம்.

எமது தேசியத் தலைவர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தை ஆரம்பித்ததன் நோக்கம் எங்களுடைய சுய பொருளாதாரத்தில் நிறைவு காண்பதன் மூலமே நிறைவான விடுதலையைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற தீர்க்கதரிசனமான நோக்கிலாகும் எனவும் தெரிவித்தார். (ரு-4)

# நிலுவைக் கொடுப்பனவைப்பெற அலைந்துதிரியும் ஓய்வூதியர்கள்!

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஓய்வூதியர்கள் தமது நிலுவைக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள முடியாது பல மாத காலமாக அலைந்துதிரிய வேணடியுள்ளது எனக் கவலை தெரிவித்துள்ளனர்.

ஓய்வூதியர்களின் ஓய்வூதியங்கள் திருத்தியமைக்கப்பட்ட சுற்றறிக்கைகளிற்கு ஏற்ப இன்றுவரை நிலுவைக்ள் எதுவும் வழங்கப்படவில்லை.

இந்நிலுவைகளைப் பெறுவதற்காக பல மாதக் கணக்காக அலைந்தபோதும் இன்றுவரை எந்தப் பிரயோசனமும் இல்லை என ஓய்வூதியர்கள் கூறுகின்றார்கள்.

ஓய்வூதிய நிலுவைகள் தொடர்பாக யாழ்.செயலகத்திற்கு முறையிட்டும் எந்தவித பிரயோசனமும் இலலை என விசனம் தெரிவிக்கும ஓய்வு,தியர்கள் காரைநகர் பிரதேச செயலக அதிகாரிகள் உண்மைக்குப் புறம்பான காரணங்களைக் கூறி ஏமாற்றி வருகின்றனர் என்றும் கவலை தெரிவித்துள்ளனர். (க-246)

# கூட்டுறவு மொ.வி.ஸ்தாபனத்தின் சில்லறை விற்பனை நிலையங்களை அரசாங்கம் மீண்டும் சுவீகரிக்கும்?

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனததின் சில்லறை விற்பனை நிலையங்களை அரசாங்கம் மீண்டும் சுவீகரிககும என்று வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தொழிற்சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து பிரச்சினைகளைக் கேட்டறிந்த போதே அமைச்சர் இந்தக கருத்தினை வெளியிட்டார். அனைத்து ஊழியர்களும மீணடும வேலைவாய்ப்புப் பெற உறுதி செய்யப்படும் எனவும் இந்த முயற்சிகள் சாத்தியப்படுவதறகுத் தேவையான நிதியைப் பெற கூட்டுறவு மொத்த விற்பனை நிலையததின் சொத்துக்களை விற்பனை செய்யுமாறும் ஜனாதிபதி தமக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் ஜெயராஜ பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

மாற்றுத் திட்டத்தை அமுல்செய்து சில்லறை விற்பனை நிலையங்களை சுவீகரிப்பதற்கு திகதி நிர்ணயிக்கப்படும்வரை தமது தொழிற்சங்கப் போராட்டம் தொடருமென கம்பனிகளுக்கிடையிலான தொழிற்சங்கப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (ரு-7)

# மாகாணக் கல்வியமைச்சின் கீழுள்ள வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் கீழ் இயங்கிவரும் வலயக் கல்வி அலுவலகங்களில் நிலவும் கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மாகாணக் கல்வியமைச்சு மேற்கொண்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண வலயககலவி அலுவலகங்கள் மற்றும் கோட்டக கல்விக் காரியாலயங்கள் என்பனவற்றில் பாடங்களுக்குப பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கான பல வெற்றிடங்கள் நிலவுவதால் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுவதால இலங்கை ஆசிரியர் சேவை மற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கல்விப் பணிப்பாளர் வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட்டு வருகின்றனர். போட்டிப் பரீட்சையொன்றின் மூலம சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்படவுள்ளனர். (ரு-9)

# இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் நடாத்தப்படும் இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியாகளுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் எதிர்வரும் 21ஆம் திகதி காலை 8.30மணிமுதல் பி.ப.3.30 மணிவரை இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கிற்கும் செயலாமர்விற்கும் தெல்லிப்பளை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் பன்னிரு திருமுறைகளில் பண்ணிசை, ஏனைய தோத்திரப் பாடல்கள், 'நீதிப்பாடல்கள்' எனும் தலைப்பில் சைவப் புலவர் சு.செல்லத்துரையும், "உபநிடதங்கள், பகவதகீதை, மூவகை வேதாந்தம், சைவசித்தாந்தம்'எனும தலைப்பில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் 'சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கமும்,

"தமிழக சைவசமய வரலாறு ஈழத்தில் சைவசமய வளர்ச்சி" என்னும் தலைப்பில் வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப் புலவர் கந்த சத்தியதாசனும், 'விரதங்கள், பண்டிகைகள், சமய ஆன்மீக விழுமியங்கள்' எனும் தலைப்பில் திருவாவடுதுறை ஆதீன சமய பிரசாரகர் சைவப்புலவர் ஏ.அனுஷாந்தனும் உரையாற்றவுள்ளனர். (ரு-19)

# பீற்றர்சன், விடார் ஹெல்கிசன் அடுத்த வாரம் இலங்கை வருகை

(கொழும்பு)

நோாவே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன், பிரதி அமைச்சர் விடார் ஹெல்கிசன் ஆகியோர் அடுத்தவாரம் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது ஸ்ரீலங்கா படையினா கடநத 3ஆண்டு காலமாக நீடித்து நடத்தி வந்த நிழல் யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும்வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவிக்கப்பட்ட சில நகர்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து நிறகும் பிரதேசங்களில் நிராயுதபாணிகளாக அரசியல் கடமையாற்றிவரும் தமது போராளிகளின் உயிருக்கான உத்தரவாதத்தை அளிக்கக்கோரி தமிழீழ விடுதலைப் புலிகள் விதித்திருந்த கெடு நிறைவடைகிறது.

ஆனால் ஸ்ரீலங்கா அரசு உரிய பதிலை அளிக்காமல் அதிருப்தி அளிக்கும் பதிலை அளித்தமையால் இராணுவப் பகுதிகளில் கடமையாற்றிய அரசியல் போராளிகளை தமது நிர்வாகப் பகுதிக்குள் திருப்பிச் செல்ல விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் கடந்த புதன்கிழமை உத்தரவிட்டது.

'இதனையடுத்து ஸ்ரீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் உள்ள தமிழீழ அரசியல் துறை அலுவலகங்கள் மூடப்பட்டன. போராளிகள் அனைவரும் தமிழீழ நிர்வாகப் பகுதிகளைச் சென்றடைந்தனர்.

இத்தகைய சூழலில் எதிர்வரும் வாரம் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் மற்றும் பிரதி அமைசசர் விடார் ஹெல்கிசன் ஆகியோர் இலங்கைக்கு வருகைதர உள்ளதாக நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைவரும் இக்குழுவினர் அரச மற்றும் தமிழீழப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடாத்த உள்ளதாகவும் கூறப்படுகிறது: (ற)

## புதிய நிர்வாகம் தெரிவு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு 4ஆம் வட்டாரம் பிட்டியம்பதி ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபைக்கான புதிய நிர்வாகத் தெரிவு கடந்த செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணியளவில் ஆலய மண்டபத்தில் ஆலய பரிபாலன தலைவர் எஸ்.முத்துராசா தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக க.வசந்தகுமார், உப தலைவர்களாக சி.சின்னையா, செயலாளராக ந.தவக்குமார், பொருளாளராக சி.மகாதேவன், கணக்காய்வாளர்களாக ந.ரவீந்திரன், ச.சத்தியமூர்த்தி ஆகியோரும்,

உறுப்பினர்களாக சு.சேதுப்பிள்ளை, சி.மன்மதராசா, சு.குணரெத்தினம், த.கோகுலவேந்தன், வே.பரஞ்சோதி, ப.சிவனேசன், க.லங்கநாதன், ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-126)

## காரைநகரில் மீண்டும் பெருகும் மயிர்க்கொட்டிகள்

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் மீண்டும் மயிர்க கொட்டியின் பெருக்கம் அதிகரித்து வருகின்றது.

காரைநகரின் களபூமி, சுப்பிரமணியம் வீதி, புதுவீதி, ஆலடி வேம்படி, தங்கோடை போன்ற கிராமங்களிலேயே மயிர்க்கொட்டிகள் பெருகியுள்ளன.

இதனால் காலை 7 மணி தொடக்கம் மதியம் 12மணிவரை குறிப்பிட்ட வீதிகளில் பயணிக்க பொதுமக்கள் அஞ்சுகின்றனர்.

இதனால் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வருட ஆரம்பத்திலும் இதேபோன்று மயிர்க்கொட்டிகளின் பெருக்கத்தினால பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டபோதிலும் சுகாதாரப் பிரிவினரும், பிரதேச செயலகமும் மௌனிதது இருந்தமை குறிபபிடத்தக்கது. (க-246)

## மோ. சைக்கிள் — சைக்கிள் விபதது ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி வீதி ஆரியகுளம் சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயடைந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

நேற்றுமுன்தினம் காலை மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் தனது கடமைக்காக யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தபோது ஆரியகுளம் சந்தியை கடக்க முற்பட்டவேளை, யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரியகுளம் சந்தியை நோக்கி வந்துகொண்டிருந்த சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது:

இதனால் சைக்கிளில் சென்ற நாவலர் வீதியைச் சேர்ந்த வீரசிங்கம் தனபாலசிங்கம் (வயது 53) என்பவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ற-130)

## இலக்கு தவறி வீழ்ந்து வெடித்தது கைக்குண்டு

(திருகோணமலை)

## சரத் அம்பேபிட்டிய கொலை; மரண தண்டனைக் கைதிகள் உயர் நீதிமன்றில் மேன்முறையீடு

(கொழும்பு)

கொழும்பில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலர் ஆகியோரின் கொலை தொடர்பில் மரணதண்டனை விதிக்கப்பட்ட 5 குற்றவாளிகளும் தமக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனைத் தீர்ப்புக்கு எதிராக கடந்த புதன்கிழமை மேன்முறையீடு செய்துள்ளனர்.

உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக இம்மேன்முறையடு வெலிககடை சிறைச்சாலையின் பிரதான அதிகாரியூடாக கொழுமபு மேல் நீதி மன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

பொட்டர் நெவூப், நிஸாந்த உதய குமார, சம்பத் துஷார அபயவிக்கிரம, துஷிச்றோக ரூபசிங்க, அமேத நிரோஷன ஆகிய ஐந்து மரணதண்டனைக் கைதிகளுக்குமே மேன் நீதிமன்ற நீதிபதிகள் கடந்த 4ஆம் திகதி மரணதண்டனை விதித்து தீர்ப்பலித்தனர்.

தமக்கு வழங்கப்பட்டுள்ள மரணதண்டனை சட்டத்துக்குப் புறம்பானது என்றும், தம்மை விடுதலை செய்யுமாறும் அந்த மேன்முறையீட்டு மனுவல் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-8)

## விஞ்ஞான பேச்சுப் போட்டி வினா - விடைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தினால் தரம் 11மாணவர்களிடையே யாழ் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட விஞ்ஞான பேச்சுப் போட்டி மற்றும் விஞ்ஞான வினா விடைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

**விஞ்ஞானப் பேச்சுப் போட்டி**

முதலாம் இடம்- ச.செந்தில்குமரன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. இரண்டாம் இடம்- அ.பிரியந்தி, இந்து மகளிர் கல்லூரி. மூன்றாம் இடம் (இருவர்)- ந.சாகினி, இளவாலை கன்னியர் மடம் ம.வி. ச.கோபிநாத், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

**விஞ்ஞான வினாடி வினாப் போட்டி**

முதற் கட்டமாக பாடசாலைகளுக்கிடையில் எழுத்து மூலமாக நடாத்தப்பட்ட வினா விடைப போட்டியில் முதல் இரு இடங்களையும் முறையே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும், மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் பெற்றுக கொண்டன. இவற்றிற்கிடையே நடைபெற்ற வாயமொழி மூல வினாடி வினா இறுதிப் போட்டியிலே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலாம் இடததைப் பெற்றுக் கொண்டது.

இந்துக் கல்லூரியிலிருந்து , ம.பிரதீபன், ப.நிரோசன், அ. வாமணன், சி. சிவமைந்தன், ந.கௌசிகன் ஆகியோரும் மெதடிஸத பெண்கள் கல்லூரியிலிருந்து கு. தர்சினி, ச.கார்த்திகா, ப.மதுஷா, பா.கிருஷானி, வ.கிருஷ்ணானந்தி ஆகியோரும் பங்குபற்றினர்.

நவம்பர் மாதத்தில் கொழும்பில் நடைபெறவுள்ள 6 மாவட்டங்களுக்கிடையிலான விஞ்ஞான வினாடி'வினாப் போட்டிக்கு இந்துக் கல்லூரி தெரிவு செய்யப்பட்டது.

எழுத்து மூலமாக நடாத்தப்பட்ட வினா விடைப் போட்டியில் அதிகூடிய புள்ளியை இளவாலை கன்னியர்மடம் ம.வியைச் சேர்ந்த ந.சாகினி பெற்றுக்கொண்டார்.

இயற்கைச் சூழல நாட் குறிப்பேட்டுப் போட்டியொன்றும் அன்றைய தினம் இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தினரால் 30 பாடசாலைகளுக்கிடையில் தொடக்கிவைககப்பட்டுள்ளது. இதன் செயற்பாடுகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்படடுள்ளது. 3 மாதங்களில பூர்த்தி செய்யப்படவுள்ளது. (ற-19)

## பாதிப்புற்றோருக்கு உதவ பல நிறுவனங்கள் முன்வருகை

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சுனாமி அனர்த்தத்தினால் பாதிககப்படட மக்களுக்கு உதவ பல நிறுவனங்கள் முன்வநதுள்ளன.

அந்த வகையில், கற்கோவளத்தில் கியூ மெடிக்கா நறுவனம் 203 நிரந்தர வீடுகளையும், தும்பளை கிழக்கில் போரூட் நிறுவனம் 18 நிரந்தர வீடுகளையும், இன்பருட்டியில் 84 வீடுகளையும், வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியல் 212 நிரந்தர வீடுகளையும், பொலிகண்டி கிழககில் 40 வீடுகளையும் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளன.

யு.என் கபிற்ரெட் நிறுவனமும் கெயர் நிறுவனமும் இணைந்து ஆதிகோவிலடியில் 150 நிரநதர வீடுகளையும் கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் பருத்தித்துறை கிழக்கில் 160 வீடுகளையும் அமைத்துக் கொடுக்கவுள்ளன.

நிரந்தர வீடுகள் அமைக்கும் திட்டம் கற்கோவளத்தில் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. மற்றைய இடங்களிலும வேலைகள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க-35)

## சேவை நலன் பாராட்டும் பிரியசாரா விழாவும்

## மருந்துப் பொருட்கள் வந்துசேர்ந்துள்ளன

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி இலவச ஆயுள்வேத வைத்தியசாலைக்கு இவ் வருடத்திற்கான ஒரு தொகுதி மருந்துப பொருட்கள் வந்து சேர்ந்துள்ளன.

இலங்கை ஆயுள்வேத மருந்து கூட்டுத்தாபனம் இம் மருந்துப் பொருட்களை நன்கொடை நிதியிலிருந்து அனுப்பிவைத்துள்ளது. (க-35)

## ஸ்ரீ கல்கி தெய்வீக அனுபவ தீட்சை

(யாழப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவான் சரணம் ஸ்வர்ணயுக அமைப்பகம் ஏகத்துவ பல்கலைக்கழகம் வழங்கும் ஸ்ரீ கலகி தெய்வீக அனுபவ தீட்சை வழங்கும நிகழ்வு நாளை காலை 9 மணி தொடக்கம் மாலை 5மணிவரை இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் கல்யாண மண்டபத்தில் இடம்பெறவுளளது.

இதனை இந்திய ஏகத்துவ பல்கலைக் கழகத்தைச சேர்ந்த ஸ்ரீ ராஜேஷ் பகவத் தாஜாஜி நடாத்தவுள்ளார். (ற-2)

## கண் சிகிச்சை

(மருதங்கேணி)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை வைத்திய நிபுணர் எஸ்.குகதாசன் கண்நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கவுள்ளார்.

எனவே, கண் சம்பந்தமான நோய் உள்ளவர்கள் இவ்வைத்திய சேவையைப் பெற்று பயனடையுமாறு கேட்கப்படுகிறது. (க-35)

## மயானம் துப்புரவு செய்யப்பட்டது

(மருதங்கேணி)

கரணவாய் கிழக்கு கிராய பொது மயானம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

இச் சிரமதானப் பணியினை கரணவாய் கிழக்கு இளைஞர் கழகம், கிராம அபிவிருத்தி சங்கம், விவசாய சம்மேளனம் ஆகியன இணைந்து கிராம அலுவலர் ஏ.எஸ்.தங்கத்துரை தலைமையில மேற்கொண்டன. (க-35)

## சுயதொழில் கடன் நடமாடும் சேவை

(கொழும்புத்துறை)

யாழ்.நகர் கிழக்கில் சுயதொழில் கடன் நடமாடும் சேவை கடந்த திங்கட்கிழமை யாழ் பிரதேச செயலர் ம.பற்றிக் நிரஞ்சன் தலைமையில் காலை 9 மணி தொடக்கம் 4.30 மணிவரை கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தின் போட்டிக்கோ மண்டபததில் நடைபெற்றது.

இதில் கோழி வளர்ப்பு, மிருக வளர்ப்பு, வீட்டுத்தோட்டம் போன்ற சுயதொழில் முயற்சிகளிற்கு 25 ஆயிரம், 10ஆயிரம் முறையே 25 பயனாளிகளிறகு கடன் வழங்கப்பட்டது.

மேற்படி நடமாடும் சுயதொழில் கடன் அறிமுக நிகழ்வில் யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வங்கி முகாமையாளர் ம.கியூமன், வங்கி கட்டுப்பாட்டுச் சபைத் தவைர் அ.யேசுதாசன், கிராம சேவகர்களான (பிரிவு 62,63) புஸ்பராணி, கமலவேணி மற்றும கொழும்புத்துறை கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர் தே.லோகேஸ்வரி ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளனர்.

## இலக்குத் தவறி வீழ்ந்து வெடித்தது கைக்குண்டு

(திருகோணமலை)

திருகோணமலை அநுராதபுரம் சந்தியினூடாகச் சென்ற பொலிஸாரின் வாகனத்தின்மீது நேற்று முன்தினம் பிற்பகல் 6 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால கைக்குண்டொன்று வீசப்பட்டது.

எனினும் இவ்வாகனம் வெகுவேகமாகச் சென்ற நிலையில் கைக்குண்டு திசைமாறி சிகையலங்கார நிலையமொன்றின் அருகே வீழ்ந்து வெடித்தது.

இதன் காரணமாக இருவர் காயங்களுக்கு இலக்காகியுள்ளனர். இதில் படுகாயமடைந்த இருவரும் திருமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக்குண்டு வீச்சுச் சம்பவம் தொடர்பாக இளைஞர் ஒருவர் கைதாகி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அபபகுதியில் பெருமளவில் இராணுவத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ச-4)

## உயரம் பாய்தலில் முதலாமிடம்

(மருதங்கேணி)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டியில் 11வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் உயரம் பாய்தலில் அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவி அருள் பிரகாசம் மேரிஜனனி முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் வடக்கு கிழக்கு மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிக்கு தெரிவுசெய்யப் பட்டுள்ளமார். (க-35)

## சேவை நலன் பாராட்டும் பிரிவுபசார விழாவும்

(புங்குடுதீவு)

அகில இலங்கை தந்தி தொடர்புகள் சேவையாளர் சங்க யாழ். கிளையினால் யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகராக தற்துணிவுடன் தன்னலம் கருதாமல் நானிலம் மதிக்க சேவை புரிந்து ஓய்வு பெற்றுள்ள சம்பந்தர் சிவராஜசிங்கம் அவர்களுக்கான சேவை நலன் பாராட்டும் பிரிவுபசார விழாவும நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் அஞ்சல் அலுவலகக் கேட்போர் கூடத்தில் அகில இலங்கை தந்தி தொடர்புகள் சேவையாளர் சங்க யாழ்.கிளைத் தலைவா ப. உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம அதிதிகளாக வடக்கு பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் என. ஜெயரெட்ணம், யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண பிராந்திய கணக்காளர் திருமதி எஸ்கலைச்செல்வன், யாழ்ப்பாண பிரதம அஞ்சல் அதிபர் க.ஞானலிங்கம், யாழ்ப்பாண பரதி /பிரதம அஞ்சல் அதிபர் எஸ். இராஜரெட்ணம், அகில இலங்கை தந்தி தொடர்பாளர் சேவையாளா சங்க கொழும்பு பொதுச் செயலாளர் டபிள்யூ.எச்.குணதாச, யாழ். கிரிக்கெட் மததியஸ்தர் சங்க தலைவர் டி.எம். வேதாபரனம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ற-126)

## நள்ளிரவில் வீட்டின் மீது வீழ்ந்தது தென்னை மரம்

### தெய்வாதீனமாக வீட்டிலுள்ளோர் தப்பினர்

(காரைநகர்)

காரைநகர் வடகிழக்கு நடுத்தெரு கிராமத்தில் நள்ளிரவு வேலை வீடு ஒன்றின் மீது தென்னை மரம் வீழ்ந்ததினால் நூற்றுக்கு மேற்பட்ட ஓடுகள் சேதமடைந்துள்ளன. எனினும் அவ்வீட்டில் தூக்கத்திலிருந்த நான்கு பேர் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

இச்சம்பவம் கடந்தவாரம் ஓய்வு பெற்ற ஆசிரியர் சீ. நவரட்ணம் என்பவரது வீட்டிலேயே இடம் பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

குறித்த வீட்டில் நள்ளிரவு 11.30 மணியளவில் வீட்டிலுள்ளோர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேள்ள பாரிய சத்தத்துடன் தென்னை மரம் முறிந்து வீட்டிற்கு மேலே விழுந்தது. வீட்டின் ஒரு பக்கத்தில் வீழ்ந்ததினால் அடுத்த அறையில் தூக்கத்தில் இருந்த நான்கு பேரும் மயிரிழையில் உயிர்தப்பினர்.

முறிந்து வீழ்ந்த மரம் அயல் வளவில் நின்றதாகவும் சோத்தியானதும் சேதமடைந்துமான மரங்களைக்கூட தறிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதனாலேயே இந்நிலை ஏற்பட்டதென அவ்வீட்டு உரிமையாளர் கவலை தெரிவித்துள்ளார். (ற-246)

டுப்பாட்டுச் சபைத் தவைர் அ.யேசுதாசன், கிராம சேவகர்களான (பிரிவு 62,63) புஸ்பராணி, கமலவேணி மற்றும கொழும்புத்துறை கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர் தே.லோகேஸ்வரி ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளனர்.

மேற்படி நடமாடும் சேவையில் 100ற்கு மேற்பட்டோரிற்கு கடன் வழங்க பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது. (க-51)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

புனரமைக்கப்பட்ட தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை ஆகியன இன்று சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு வடகிழக்கு மாகாண ஆளுனர் டிரோன் பெர்னாண்டோவினால் திறந்து வைக்கப்படவுள்ளது. (க)

## போயா ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை குருபூர்ணிமா தினவிழா அதிகாலை 5 மணிக்கு நகரசங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நணபகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறவுள்ளது. (ற)

## பரீட்சை

(கொழும்பு)

தகவல் தொழில்நுட்பப் பாடத்தைக் கற்கும் 12ஆம் தர மாணவர்களுக்கென தேசிய மட்டத்திலான பரீட்சை ஒன்றை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி நடத்துவதற்கு கல்வி அமைச்சு உத்தேசித்துள்ளது.

இப்பரீட்சையை ஒவ்வொரு வருடததிலும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் தகவல் தொடர்பு தொழில்நுட்ப ஆலோசகர் டிலந்த விதானகே தெரிவித்துள்ளார். (ற-9)

# பொதுக் கட்டமைப்புக்கு நிதி வழங்குவது சட்டவிரோதம்

## ஹெல உறுமய பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகருக்குக் கடிதம்

(கொழும்பு)

புலிகளுக்கும் அரசுக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கைக்கமைய நிதி வழங்குவது 2000 ஆம் ஆண்டின் பயங்கரவாதத்திற்கெதிரான பிரிட்டிஷ் அரச சட்டத்தின் படியும் இலங்கை அரசியல் யாப்பின் 148, 149, 157 ஆம் பிரிவுகளின்படியும் சட்ட மீறலாகும் என ஹெல உறுமய கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் ஸ்டீபன் இவானுக்கு எழுதிய கடிதமொன்றில் தெரிவித்துள்ளது.

உயர்ஸ்தானிகருக்கு எழுதிய அக்கடிதத்தில் ஹெல உறுமய செயலாளர் ஓமல்பே சோபித தேரர் பொதுக்கட்டமைப்பிற்கு எத்தகைய நிதியும் வழங்குவதற்கு உடன்படமாட்டோம் என அமெரிக்க, ஜப்பான் அரசாங்கங்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளன.

புலிகள் பிரிட்டிஷ் தடைசெய்யபபட்ட இயக்கம் என்பதை நினைவுபடுத்துவதாகத் தெரிவித்த ஹெல உறுமய, புலிகளுக்கும் அல்குவைதா இயக்கத்திற்குமுள்ள தொடர்புகள் பற்றி றொகான் குணரட்ண எழுதிய ஆக்கத்தின் பிரதி ஒன்றையும் உயர்ஸ்தானிகருக்கு அனுப்பி வைத்துள்ளது.

இதையொத்த கருத்தையே அவர்கள் அமெரிக்கத் தூதுவர் ஜெபரி லன்ஸ்ரெட்டிடமும் தெரிவித்துள்ளனர். அத்துடன் அல்குவைதா தொடர்பில் கைக்கொள்ளும் அதே கடுமையான போக்கைக் கைக்கொள்ள வேண்டுமென ஹெல உறுமய பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகரைக கேட்டுக் கொண்டுள்ளது. (து-6,8)

# வீரக்கனி ஆற்றின் மீது பாதை; வேலைத்திட்டம் ஆரம்பம்

(அம்பன்)

கண்டி இறக்க மாமுனை வீதியை வீரக்கனி ஆற்றின் ஊடாக பளை தம்பகாம வீதியுடன் இணைப்பதற்கான வேலைத்திட்டம் கடந்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் வைபவத்தில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன், விடுதலைப்புலிப் பிரமுகர்கள மற்றும் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வரவேற்புரையை செம்பியன் பற்று உப அலுவலகப் பொறுப்பதிகாரி பொ.தங்கராசா நிகழ்தினார். இவ வைபவத்திற்கு பதிவாளர் வே.தவசசெல்வம் தலைமை தாங்கினார்.

இவ்வீதி அமைப்பதற்கான நிதியை அமெரிக்காவில் வசிக்கும் மாமுனையைச் சேர்ந்த க.இராசலிங்கம் என்பவர் வழங்கவுள்ளார்.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன் எம்.பியும் இதற்கான ரூபா 10 இலட்சத்தை வழங்கவுள்ளார். (ற-56)

# பாடசாலைகளின் துப்புரவு வசதி

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள நடுத்தர சிறிய பாடசாலைகளில் மாணவர்கள் பாவிக்கும், சல கூடங்கள், மலசல கூடங்களைத் துப்புரவு செய்வதற்கு உரிய வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் பல பாடசாலைகளில், தற்போது அரச/அரசசார்பற்ற நிறுவனங்களால் தேவைக்கு ஏற்றவாறு பல மலசல கூடங்கள், சலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளபோதிலும் அவற்றைத் துப்புரவு செய்வதற்குரிய நீரும், ஆளணியும் பற்றாக்குறையாகவுள்ளதால் அவற்றை மாணவர்களே தினமும் சுத்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண பழைய மாணவர்சங்கம், பெற்றோர், ஆசிரியர் அபிவிருத்திச்சங்கங்கள் ஊடாக நடவடிக்கை எடுத்தல் அவசியம் எனவும், ஆளணி வளத்தை கல்வித்திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் ஊடாக சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பது அவசியம் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பல பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பிரஸதாபிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. (து-252)

# மக்களின் பதற்றத்தைத் தணிக்க இரு தரப்பும் முன்வர வேண்டும்

(கொழும்பு)

திருமலையில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் வன்முறைகள் குறிதது ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகவும் இச்சூழ்நிலையினைக் கவனமாகக் கையாண்டுவருவதாக யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒல்ஸ்ரோட்டியர் தெரிவித்துள்ளார்.

முன்னர் மட்டக்களப்பில் இருந்த முறுகல் நிலை தற்சமயம் திருகோணமலைக்கு நகர்ந்துள்ளது என்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் அவதானமாகவும், சிறப்பாகவும் நிலைமையைக் கையாண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனடிப்படையில் தாம் முதலில் இரண்டு தரப்பினருக்கும் இடையில் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவிருப்பதாகவும் இதன் பின்னர் நிலமையின் தன்மையினைக் குறைக்கும் வகையில் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்த அவர்,

இந்த நிலையில் இரு தரப்பும் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலையினைத் தணிக்க வேண்டுமெனத் தமது குழு கேட்டுக் கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார். (து-4)

# ஸ்தாபகர் சிலை திறப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் சிறி ராமகிருஷ்ணா வித்தியாலய ஸ்தாபகரின் சிலை நேற்றுக்காலை திறந்து வைக்கப்பட்டது.

இப்பாடசாலையை அமைத்த ஸ்தாபகரின் 100 ஆவது வயது பூர்த்தியை நினைவுகூரும் வகையில் இச் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் ஸ்தாபகர் சிலையை யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ.த.விகனராஜா திறந்துவைத்தார். மேலும், இந் நிகழ்விற்கு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, திருகோணமலை மாவட்ட முன்னாள் மேலதிக அரச அதிபரும் தற்போதைய நிக்கொட் நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளருமான புவனேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற-19)

# குறைந்த வயதுடையோர் வாகனம் ஓட்டுவதற்குத் தடை

(கிளிநொச்சி)

குறைந்த வயதுடையோர் வாகனம் ஓட்டத்தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் இதை மீறுவோர் மீது சடட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தமிழீழ காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் ப.சிவகுமாரன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

☞ அதிகரித்து வரும் வாகன விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் வயது குறைந்த இருபாலாரும் வாகனம் ஓடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

☞ 18 வயதுக்குட்பட்ட எவரும் மோட்டார் சைக்கிள் ஓட்டமுடியாது

☞ இதேபோன்று 21 வயதுக்குட்பட்ட எவரும் கனரக வாகனம் ஓடமுடியாது.

☞ இவற்றைப் பின்பற்றாமல் வாகனம் ஓடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

☞ அத்துடள் வயது குறைந்தவர்களுக்கு வாகனம் ஓட்டுவதற்கு கொடுக்கும் வாகன உரிமையாளர்களுக்கு எதிராகவும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# நோபல் பரிசுக்கு யாழ்.பெண்மணி சிபாரிசு

(கொழும்பு)

2005 ஆம் ஆண்டின் சமூக சேவைக்கான நோபல் பரிசிற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சமூக சேவையாளர் சைலா இதயராஜா பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

இவர் இலங்கையிலிருந்து நோபல் பரிசிற்காக பரிந்துரை செய்யப்பட்ட 12 பேரில் ஒருவர். இவர் தனது 19 ஆவது வயதிலேயே விதவையானவர் அவரிடம் இருந்த மனவுறுதியே அவரை இந்த நிலைக்கு உயர்த்தியிருக்கின்றது.

தன்னைப் போல் இன்னொரு விதவை உருவாகக் கூடாது என்ற சைலா, பெண்களின் நல்வாழ்விற்காக தன்னையே அர்ப்பணித்தார்.

இவருடைய இந்தச் சேவைக்காகவே இவர் நோபல் பரிசிற்காக சிபாரிசு செய்யப்பட்டார். (க-2)

# ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் ஆழிப்பேரலை நிவாரணப் பணி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கொக்குவில், தாவடி ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமத்தினரால் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணி இன்று பி.ப.2. மணிக்கு தாளையடி வடமராட்சிக கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் கொழும்பு ராமகிருஷ்ண மிசன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணானந்தஜி மகராஜ் பிரதம விருந்தினராகவும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கே.கணேஷ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதிகளான வெற்றிலைக்கேணி, ஆழியவளை, உடுத்துறை, மருதங்கேணி போன்ற கிராமங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலவசமாகத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ற-2)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் காயம்

(மருதங்கேணி)

இரண்டு மோட்டார சைக்கிளும் ஒரு சைக்கிளும் மோதிக் கொண்டதில் மூன்று பேர் காயமடைந்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வல்வைச் சந்தி இராணுவ முகாமிற்கு அண்மையில் கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் ஒளிநிலா (வயது-27), மரியாம்பிள்ளை கனகம்மா (வயது-69), எஸ்.வேதநாயகம் (வயது-55) ஆகிய மூவரும் படுகாயமடைந்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-35)

## நுளம்பு வலை அன்பளிப்பு

(பருத்தித்துறை)

யாழ்ப்பாண லயன்ஸ் கழகம் மலேரியா நோய் ஒழிப்புத்திட்டத்தின் கீழ் கரையோரப்பிரதேசத்தைச் சேர்ந்த 1000 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இவ் நுளம்பு வலை வழங்கும் வைபவம் யாழ்.லயன்ஸ்கழகத் தலைவர் எஸ்.அன்பானந்தன் தலைமையில் நடைபெற்றது.(ற-52)

## விபத்தில் காயமடைந்தவர் வைத்தியசாலையில் மரணம

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் -சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையல் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

பொற்பதி கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான அருணகிரிநாதன் (வயது-32) என்ற குடும்பஸ்தரே உயிரிமங்கவாாவார். (ச-8)

# யாழ்.,மட்டு.,திருமலைக்கு மேலதிக பொலிஸார்

(கொழும்பு)

திருகோணமலைச் சம்பவத்தையடுத்து யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களுக்கு மேலதிக பொலிஸ் அதிகாரிகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமை அலுவலகத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் போதிலியனகே தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம், குருநாகல் ஆகிய பிரதேசங்களிலிருந்தே இப் பகுதிகளுக்குப் பொலிஸ் அதிகாரிகள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற-9)



மாந்தை கிழக்குப் பிரதேச சபை பிராந்திய எல்லைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்குகின்ற பாலர் பாடசாலை மாணவர்களுக்கு மாந்தை கிழக்குப் பிரதேச சபையால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதிகளை மாந்தை கிழக்குப் பிரதேச சபையின் விசேட ஆணையாளர், திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா ஆசிரியரிடம் கையளிக்கிறார்.

(படம்:-ம.இந்திரநாதன்)

# அணிநடையோ புதுராகம்

அன்னையவள் மலரடியில்
அணிநடையோ புதுராகம்
மண்ணில் நல்ல அருள்பொழியும்
முழுநிலவின் கார்மேகம்
மின்னும் வெள்ளி மணி முடிமேல்
மாதா பால் வரும் தாகம்
கொண்ட மறை வேதவொலியில்
கார்மேல் அன்னை ஒரு பாகம்

(ஏகலைவன்)

ச.சேவியர் வில்பிரட்

அல்லைப்பிட்டி - 3

இன்று (16-07-2005) நடைபெறும் அல்லைப்பிட்டி புனித உத்தரிய அன்னையின் பெருவிழாவையொட்டிய எண்சீர்விருத்தம்.

(C/1482)

# முல்லை மாவட்ட அபி.வேலைத்திட்டங்களுக்கு கனகரத்திணம் எம்.பி. ரூ.3650,000 நிதி ஒதுக்கீடு

(முல்லைத்தீவு)

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் தனது 2005ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கென 3650,000ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள குமுளமுனை மா.வி., தண்ணீர் ஊற்றுஅ.த.க.பாடசாலை, சி.சி.ரி.எம்.எப்.பாடசாலை, கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசாலை ஆகியவற்றின் சிறு திருத்த வேலைகளுக்கும், முள்ளியவளை தமிழ வித்தியாலயம், வற்றாப்பளை ம.வி, முள்ளியவளை றோ.க.த.க. பாடசாலை ஆகியவற்றின் நூல் நிலையங்களுக்குப் புத்தகங்கள் வழங்கலுக்காகவும்,

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்துக்கு சலகூடம் அமைப்பதற்காகவும், முள்ளியவளை பொது மருத்துவமனைக்கு முள்கம்பிவேலி அமைப்பதற்காகவும், குமுளமுனை அளமபில் வீதி, முள்ளியவளை சுடலை வீதிகளைப் புனரமைபபதற்காகவும், நீராவிபபிட்டி பள்ளிவாசல் பாடசாலைக்கு தறகாலிக கொட்டகை அமைப்பதற்காகவும் பதிவு செய்யப்பட்ட விளையாடடுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காகவும்,

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் விசுவமடு ம.வி, உடையார்கட்டு ம.வி.,சிவநகர் த.வி.,கொக்கிளாய் அ.த.க.பாடசாலை ஆகியவற்றின் நூல் நிலையங்களுக்குப் புத்தகங்கள் வழங்குவதற்காகவும் முல்லை வலயக் கல்விப் பணிமனைக்கு மல்ரிமீடியா புரஜெக்ரர் வழங்குவதற்காகவும், தேவிபுரம் வீதியில் நீர்ப்போக்கி வாய்க்கால் அமைப்பதற்காகவும் இரணைப்பால வீதியில் பாலம் அமைப்பதற்காகவும், புதுக்குடியிருப்பு மேற்கில் சிறுவர் பூங்கா அமைப்பதற்காகவும், பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்காகவும்,

உடையார்கட்டு வடக்கில் முன் பள்ளிக் கட்டடம் அமைப்பதற்காகவும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஒட்டுசுட்டான் ம.வி., திருமுருகண்டி அ.த.க.பாடசாலைகளின் கட்டட சிறு திருத்த வேலைகளுக்கும், தண்டுவான் அ.த.க.பா., கற்சிலைமடு அ.த.கபாடசாலை, காதலியாா சம்மளங்குளம் அ.த.க. பாடசாலை ஆகியவற்றின் நூல் நிலையங்களுககுப புத்தகங்கள் வாங்குவதறகாகவும்,

ஒட்டுசுடடான் பொது மருத்துவமனைக்கு முடகம்பி வேலி அமைப்பதற்காதவும், மேலவனம் வீதியில பாலம் அமைப்பதற்காகவும் ஒட்டுசுடடான் பொலிஸ் நிலையச் சந்தியிலருந்து முத்துஐயன் கட்டுக்குள வீதியின் அவசர திருத்த வேலைக்கும,

பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக கழகஙகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்காகவும், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாண்டியன் குளம் ம.வி., வன்னிவிளான் குளம் அ.த.க. பாடசாலை ஆகியவற்றின் நூல் நிலையங்களுக்குப் புத்தகம் வழங்குவதற்காகவும், நட்டாங்கண்டல அ.த.க.பாடசாலைக்கு விளையாடடு மைதானம் அமைப்பதற்காகவும், கொம்புவைத்த குளம் மூன்று முறிப்பு வீதியின் அவசர திருத்த வேலைகளுக்காகவும், வன்னிவிளான்குளம் சுடலை புனரமைபதககாகவும், மாந்தை கிழக்கு பரதேச சபை நூலகத்திற்கு தளபாடங்கள் வழங்குவதற்காகவும பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்காகவும், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில ஆலங்குளம் சுடலை புனரமைபபுக் காகவும்,

பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்காகவும், துணுக்காய் உ.அ.அ.பணிமனைக்கு மலசலகூடம் அமைப்பதற்காகவும், மூனறு முறிப்பு கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு சூரிய மின்கலம் அமைப்பதற்காகவும், கொக்காவில் துணுக்காய் வீதியில் தாம்போதி அமைப்பதற்காகவும், முல்லைதததீவுகச்சேரிக்கு 2005ஆம் ஆணடுக்கான புள்ளிவிபரக் கைநூல தயாரிப்பதற்காகவும்-மொத்தம் 3650,000 ரூபா நீதி ஒதுக்கபபட்டுளளது.(து-128)

# பாதிப்புற்றோருக்கான நிவாரணம் இடைநிறுத்தம்

(கோண்டாவில)

சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட முதலாவது சுனாமி நிவாரண முத்திரைக்கான உலர் உணவுப் பொருள் விநியோகம் சில முத்திரைகள் இருக்குமபோதே இடைநடுவில் நிறுத்திவைக்கப்பட்டுவிட்டு புதிய முத்திரைகள் இப்போது வழங்கப்பட்டு வருவதன காரணமாக சம்பந்தப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே நிவாரணமாக வழங்கப்பட்ட அரிசி அல்லது மா மற்றும் பருமபு, சீனி, தேங்காய் எண்ணெய் என்பன பின் வழங்கப்படாது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மேல்மட்டத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இதுபற்றி தமக்கு எதுவித அறிவித்தலும் கச்சேரியிலிருந்து கிடைக்கவில்லை எனவும் பொருட்களும் வழங்கப்படவில்லையெனவும் தற்போது அவையாவும் இரத்துச் செய்யப்பட்டுவிட்டதாகவும் புதிதாக வழங்கப்படும் புதிய முத்திரைகளுக்கே இனி உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது.

தற்போது புதிய முத்திரைகளிலும் எத்தனை புள்ளிகள் இரத்து செய்யப்படுமோ என மக்கள் மத்தியில் பலமான கேள்விகள் எழுப்பப படுகின்றன.

இத்தகைய தவறு எங்கிருந்து வருகின்றது இவற்றை எவ்வாறு சீர்செய்ய முடியும் என்பதுகுறித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் கவனத்திற்கொள்ள வேண்டும் என்பது மக்கள் கோரிக்கையாகும். (க-130)

# பெனடிக்ற் பாப்பரசர் ஜேர்மனி செல்வார்

(யாழ்ப்பாணம்)

உலக இளைஞர் தினத்திற்காக திருத்தநதை 16ஆம் பெனடிக்ற் பாப்பரசர் தம் சொந்த மண்ணான ஜேர்மனிக்குச் செல்ல ஆயத்தமாகியுள்ளார்.

உரோமபுரி விமான நிலையத்தில் இருந்து எதிர்வரும் 18ஆம் திகதி காலை புறப்படும் பாப்பரசர் 2 மணித்தியாலங்களின் பின்னர் பொண் விமான நிலையத்தில் தரைஇறங்குவார்.

அன்றையதினம் கொலோன் நகரில் நடைபெறும் செபக்கூட்டம் ஒன்றிற்கும் செல்வார்.

2ஆம் யோவான் பவுல் பாப்பரசர் உரோமபுரியில் உள்ள செபக்கூடத்திறகு 1986ஆம் ஆண்டு சென்றார்.

அதன்பின்னர் 2ஆவது தடவையாக தற்கா'லிக பாப்பரசர்களில் ஒருவர் விஜயம் செய்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மேமாதம் 29ஆம் திகதி உரோமபுரியைவிட்டு இத்தாலியின் பாறி நகரிற்கு தேசிய நற்கருணை மகாநாட்டிற்கு சென்ற திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் பாபபரசர் 2ஆவது தடவையாக வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-7)

# உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அல்வாய் தெற்கு மாலை சந்தைப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை காலை தேர் உற்சவமும் தொடர்ந்து நாளை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

(ற)

# யாழ்.- கிளிநொச்சி அபிவிருத்திப் பணிக்கென கஜேந்திரன் எம்.பி ரூ.5,000,000 நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினா எஸ்.கஜேந்திரன், 2005 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் அவருக்கென ஒதுக்கப்பட்ட 50 இலடசம் ரூபாவை யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்தி வேலைகளுக்காக ஒதுக்கடு செய்துள்ளார்.

அநநிதியில், யாழ்ப்பாண மாவட்டத்தில் மீன்பிடி அபிவிருத்திக்காக 6 இலட்சத்து 50ஆயிரம் ரூபாவும், விஞ்ஞான தொழில்நுட்ப அலுவல்களுக்காத 6இலட்சத்து 25ஆயிரம் ரூபாவும், சுற்றுச் சூழல் முகாமைக்கு 25ஆயிரம் ரூபாவும், நீர் விநியோகம், சுகாதாரத்துக்காக 2இலட்சம் ரூபாவும், சமூக ஆய்வு அபிவிருத்திக்காக 3 இலட்சத்து 65ஆயிரம் ரூபாவும் தெருக்கள் அபிவிருத்திக்காக 90 ஆயிரம் ரூபாவும்,

கல்விக்காக 9இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும், சமூக நலனோன்பு, கலாசார சேவைகளுக்காக 1 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 30 இலட்சத்து 30ஆயிரம் ரூபா யாழ்ப்பாண மாவட்டத்துக்கும்,

கிளிநொச்சி மாவட்டத்தில், விஞ்ஞான தொழில்நுட்ப அலுவல்களுக்காக 7 இலட்சத்து 50ஆயிரம் ரூபாவும, சமூக ஆய்வு அபிவிருத்திக்காக 1இலட்சத்து 65ஆயிரம் ரூபாவும், கல்விக்காக 5இலட்சத்து 60 ஆயிரம்ரூபாவும், சமூக நலனோன்பு கலாசாரசேவைகளுக்காக 3 இலட்சத்து 45ஆயிரம் ரூபாவுமாக கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி வேலைகளுக்காக 18 இலடசத்து 20ஆயிரம் ரூபா நிதியும் ஒதுககீடு செயதுள்ளார்.

அத்துடன் இவ்விரு மாவட்டங்களிலும் மாவட்ட நிர்வாகத்தைப் பலப்படுத்துவதற்காக 1இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (து)

# யாழ்ப்பாணத்துக்கும் விஸ்தரிக்கப்படவுள்ள கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம்

வடக்கு-கிழக்கு மாகாண கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் திட்டப்பணிப்பாளர் குரூஸ் க்டநத புதன்கிழமை யாழ்ப்பாணம் வ்ருகை தந்தார்.

இத் திட்டத்தின்கீழ் யாழ்.மாவட்டதத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு ஐந்து மில்லியன் தொகையைக் கொண்டு வீடமைத்துக்கொடுத்தல் தவிர்ந்த ஏனைய உதவிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவ் உதவிகள் யாவும் யாழ். மாவடட உளளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும்.

வடக்கு-கிழக்கு மாகாண கரையோர சமுதாய அபிவிருத்தி திட்டதின் தலைமையகம திருகோணமலையில் உள்ளது. இதுவரை காலமும் இவ் அமைப்பானது கிழக்கு மாகாணத்திலே தனது செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்துள்ளது. தற்போது யாழ்.மாவட்டத்திலும் உதவிகளை மேற்கொள்வதற்கு முன் வந்திருப்பதால் இதன அலுவலகமொன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இயங்கவுள்ளது. இதன் பிரதித்திட்டப் பணிப்பாளராக பா.செந்தில்நந்தனன் நியமிக்கப்பட்டுள்ளார். (து-9)

# முன்மாதிரியாகச் செயற்பட்டுவரும் தங்கோடை இளைஞர் கழகம்

காரைநகரில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட தங்கோடை இளைஞர் கழகத்தினால் பல்வேறு பயன்தரு முன்மாதிரி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த வாரம் தங்கோடை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கட்டடத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தங்கோடை இளைஞ்கழகத்தைச்சேர்ந்த அங்கத்துவ இளைஞர்களால் காரைநகர் நீலகிரி மயான வீதி சிரமதான முறையில் துப்புரவு செய்யப்பட்டது.

கடநத 15வருடங்களாக பாவனையின்றி இருந்த இவ் வீதியின் முக்கியத்துவத்தினை உணர்ந்த இளைஞர்களால் இதனை சிரமதான முறையில் துபபுரவு செய்யப்படடமை அரச திணைக்களங்களிற்கே முன்மாதிரியாக அமைந்துள்ளது. என அப்பகுதி மககள்பலருமபாராடடியுளளனர்.

அததுடன் காரைநகர் தங்கோடை குடிநீர் கிணறு ஒன்றும் இவ்இளைஞர்களால் சிரமதான முறையில் இறைத்துத் துப்புரவாக்கப்பட்டுள்ளதோடு இளைஞர்களின் பொழுதுபோக்கு வசதிக்காக தங்கோடை கிராம அபிவிருத்திச் சங்கத்தினால விளையாட்டு உபகரணங்கள் பலவும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-246)

# பொதுக்கூட்டம்

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையின் வருடாந்த அபிவிருத்திச்சங்க பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 11.00மணிக்கு வைத்தியசாலை கேட்போர் கூடத்தில து.தனபாலசிங்கம் (ஜேபி) தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழவில் பிரதம விருந்தினராக பிரதி சுகாதார சேவை மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அ.கேதீஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ற-74)

# வட்டியை நோக்கமாகக் கொண்டே பிரதமரின் கணக்கில் சுனாமி நிதிவைப்பு

## ஐ.தே.க.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது தனிப்பட்ட கணக்கில் வட்டியினை நோக்காகக் கொண்டே பொதுக்கட்டமைப்பின் நிதியினை வைத்திருந்ததாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

பிரதம மந்திரியின் தனிப்பட்ட கணக்கில் கடந்த ஜனவரிமாதம் 31ஆம் திகதி 83மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது.

எனினும், பெப்ரவரி மாதத்திலேயே இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. எனவே, இது முழுமையாகவே வட்டியினை நோக்காகக்கொண்ட வைப்பு என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இது தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு உண்மையான நிலைப்பாட்டினை விரைவில் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# காரைநகர் சமுர்த்தி வங்கிக்கு ரூ.13இலட்சத்தில் புதிய கட்டடம்

காரைநகர் சமுர்த்தி வங்கிக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கு சமுர்த்தி அதிகாரசபையால் 13இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக காரைநகர் பிரதேச செயலக வட்டாரம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி அவ்வட்டாரம் மேலும் தெரிவிக்கையில்,

காரைநகர் சமுர்த்தி வங்கியானது தற்போது காரைநகர் கமநல சேவைகள் நிலைய கட்டடத்தில் இயஙகி வருகின்றது. இதன் சொந்தக்கடடடம் மடத்துக்கரை அம்மன் ஆலயத்திற்கு முன்பாக அமைக்கப் படவுள்ளது. இதற்கு சமுர்த்தி அதிகாரசபையினால் 13 இலட்சம் ஒதுக்கப்படடுள்ளது. இதனால் இப் புதிய கட்டடம் இவ்வருட இறுதிக்குள் நிறுவப்பட்டுவிடும் எனக் குறிப்பிடப்பட்டது. (ற-246)

# இலங்கையில் ஆயுத பயிற்சி பெற்று பெயர் மாற்றி துபாய் சென்ற வாலிபர்

(இராமநாதபுரம்)

இலங்கையில் ஆயுதப் பயிற்சி பெற்று முஸ்லிமாக மாறி பெயர் மாற்றம் செய்த வாலபர் துபாய் சென்று திரும்பிய நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையை சேர்ந்த கிருபாகரன் என்ற ரங்சன் கூர்கூ (வயது 37) இவர் தனது பெயரை முகமது இஸ்மாயில் என மாற்றம் செய்து இந்தியாவில் சட்ட விரோதமாக தங்கியிருந்துள்ளார். இலங்கை திருகோணமலையில் வீடுதலைப்புலிகளிடம் பயிற்சி பெற்ற ரங்சன் கூர்கூ 1997இல் இலங்கை அகதியாக வந்து மண்டபம் அகதி முகாமில் தங்கியிருந்தாராம். பின்னர் அங்கிருந்து திருப்பாலைக்குழக்கு தப்பிச் சென்று மதம் மாறி தனது பெயரை முகமது இஸ்மாயில் என மாற்றம் செய்துவிட்டு அதே ஊரில் வசிக்கும் முகமதுஸ் வானா என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டாராம். இதற்கிடையே முகமதுஸ்வானாவின் தந்தை பெயர் மாற்றம் செய்து தனது மகளை மணந்த முகமது இஸ்மாயிலுக்கு இந்திய பிரஜையாக பதிவு செய்து ரேசன் கார்டு மற்றும் வாக்குச்சீட்டில் பெயர் இடம் பெறச் செய்து பாஸ் போர்ட்டும் எடுத்தாராம. அந்த பாஸ்போர்ட் மூலம் கடந்த 1999இல் முகமது இஸ்மாயில் அரபு நாட்டுக்கு (துபாய்) வேலைக்கு சென்றுள்ளார். அங்கிருந்து கடந்த 7ஆம் திகதி இந்தியாவுக்கு திரும்பினார்.

இதனிடையே ஆயுதபயிற்சி பெற்ற ரங்சன்கூர்கூ தனது பெயரை முகமதுஇஸ்மாயில் என மாற்றி பாஸ்போர்ட் பெற்று மோசடி செய்தது குறித்து கியூபிராஞ்ச் பொலஜஸாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து கியூபிராஞ்ச் பொலிஸார் துபாயிலிருந்து இநதியா திரும்பிய முகமது இஸ்மாயிலிடம் விசாரணை நடத்தினர். விசாரணையில் மேற்கண்ட தகவல் உண்மை என தெரியவந்தது.

இது குறித்து முகமது இஸ்மாயில் மீது பொலீசார் வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்தனர். மேலும் இலங்கை பிரஜையாக இருந்த ரங்சன்கூர்கூ பெயர் மாற்றம் செய்ய போலி பாஸ்போர்ட்டு வாங்கப்பட்டதா, இந்திய பிரஜையாக இவர் எப்படி சேர்க்கப்பட்டார், இவரது பெயர் ரேசன் கார்டில் பதிவு செய்ய காரணமான அதிகாரிகள் யார் என்பது குறித்து சி.பி.சி.ஐ.டி.பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ற)



பாகிஸ்தான் ரயில் விபத்தில் படுகாயமடைந்த ஒரு, தாய்க்கும், குழந்தைக்கும் அதிபர் முஷாரப் ஆறுதல் கூறிய காட்சி.

உலக தரிசனம்

# பாக். ரயில் விபத்துக்கு காரணம் சதிவேலையா? இன்ஜின் கோளாறா?

## ரயில்வே அதிகாரிகள் குழப்பத்தில்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் மூன்று பயணிகள் ரயில்கள் மோதிக்கொண்டதில் நூற்றுக்கும் அதிகமானோர் இறந்தனர். இந்த விபத்து ரயில்வே உயர் அதிகாரிகளுக்கு பெரிய குழப்பத்தை ஏறபடுத்தியுள்ளது. சதிவேலைதான் காரணம் என்று ஒரு சாராரும், சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குறைபாடு கொண்ட ரயில இன்ஜின்களே காரணம் என்று மற்றொரு சாராரும் புகார் தெரிவித்துள்ளனர்.

விபத்து குறித்து உயர்நிலை விசாரணைக்கு உத்தரவிட்டுள்ள பாகிஸ்தான் அதிபர், முஷாரப், சதிவேலைக்கான வாய்ப்பில்லை என்றும் ரயில் ஊழியர்களின் அலட் சியத்தால் விபத்து நடந்திருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

கராச்சியில் இருந்து 600 கிலோமீற்றர் தொலைவில் சிந்து மாகாணத்தில் கோட்கி நகருக்கு அருகே உள்ள சர்ஹாத் ரயில் நிலையத்தில் கடந்த புதன்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு இந்த பயங்கர விபத்து நேரிட்டது. கராச்சி எக்ஸ்பிரஸ் ரயிலின் டிரைவர், சிக்னலைப் பார்க்காததே விபத்துக்குக் காரணம் என ரயில்வே உயர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையே சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட டீசல் ரயில இன்ஜினில் உள்ள குறைபாடு காரணமாகவே விபத்து நடந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில்,இன்ஜினின் தரம் குறித்து பாகிஸ்தான் ரயில்வே அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாகிஸ்தானில் இதற்கு முன்னர் நடந்த ரயில் விபத்துகள் குறித்து விசாரணை செய்த அதிகாரி ஒருவர், விபத்து நடந்த சூழ்நிலையைப் பார்க்கும்போது சதிவேலை காரணமாக இருக்கலாம் எனத் தெரிவதாகக் கூறினார். விபத்து நடந்த இடத்தை அதிபர் முஷாரப் நேற்றுமுன்தினம் சென்று பார்வையிட் டார்.(ற)



அமெரிக்க அதிபர் புஷ்சின் மனைவி லாரா புஷ் (இடது) மற்றும் அவரது மகள் ஜென்னா புஷ் (வலது ஓரம்) ஆகியோர் தற்போது தான்சானியா நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளனர். நேற்றுமுன்தினம் அவர்கள் எய்ட்ஸ் நோயாளிகளை நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய காட்சி.

# 'ஆட்டோகிராப்' படத்துக்கு 3 தேசிய விருதுகள்

'ஆட்டோக்கிராப்' சினிமா படத்துக்கு 3தேசிய விருதுகள் கிடைத்துள்ளன.

2004ஆம் ஆண்டுக்கான 52வது சிறந்த சினிமா விருதுகளை மத்திய அரசு நேற்று முன்தினம் அறிவித்தது. மொத்தம் 117 படங்கள் பரிசீலிக்கப்பட்டன. இதில் இந்தி படங்களுக்கு விருதுகள் அதிகம் கிடைத்தாலும் தமிழ் படங்களும் பல விருதுகளை பெற்று சாதனை புரிந்துள்ளன.

ஆட்டோகிராப் தமிழ் படம் 3 விருதுகளை பெற்று சாதனை படைத்திருக்கிறது. சிறந்த ஜனரஞ்சகப் படமாக தேர்ந்து எடுக்கப்பட்ட 2 படங்களில் ஆட்டோகிராப் படமும் ஒன்று.

கிராமத்தை சேர்ந்த ஒரு வாலிபர் தனது பள்ளிக்கூட நாட்களை நினைவு கூர்வதுடன் இணைந்த காதல் கதை இது. இதன் இயக்குனர் சேரன். மற்றொரு படமான 'வீர் ஜாரா' இந்திப்படம், இந்திய விமானப்படை அதிகாரிக்கும் பாகிஸ்தான் பெண்ணுக்கும் இடையே ஏற்பட்ட காதல் கதையைக் கொண்டதாகும்.

சிறந்த படங்களாக தேர்ந்து எடுக்கப்பட்ட 'வீர ஜாரா', 'ஆட்டோகிராப்' படங்களுக்கு தங்கத்தாமரை விருதும், ரூ.20ஆயிரம் ரொக்கப் பரிசும் வழங்கப்படும்.

'ஆட்டோக்கிராப' படத்தில் பின்னணி குரலில் பாடிய சித்ரா சுப்பிரமணியம் சிறந்த பாடகியாக தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார். பாடல்: ஒவவொரு பூக்களுமே....இதே படத்தின் பாடல ஆசிரியர் பா.விஜய், சிறந்த பாடல் ஆசிரியராக தேர்வு பெற்று இருக்கிறார்.

சிறந்த இமைப்பாளராக வித்யாசாகர் தேர்ந்து எடுக்கப்பட்டார்(படம்:ஸ்வர அபிஷேகம்). சிறந்த நடன இயக்குனராக பிரபுதேவா தேர்ந்து எடுக்கப்பட்டார்(படம்:லக்ஷயா)

தமிழில் சிறந்த படமாக 'நவரசா' தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. சிறந்த டைரக்டராக சந்தோஷ் சிவன் தேர்ந்து எடுக்கப்பட்டார்.

'டான்சர்' தமிழ் படத்தில் ஒற்றைக்காலில் நடனம் ஆடிய பிலப் என்ற குட்டிக்கு சிறந்த நீதிபதிகளின் விருது வழங்கப்படுகிறது.(ற)

# நடிகை ஐஸ்வர்யா ராய்க்கு சல்மான் கொலை மிரட்டல்

## பொலிஸார் தீவிர விசாரணை

(மும்பை)

உலக அழகியும் நடிகையுமான ஐஸ்வர்யா ராயை குடும்பத்தோடு கொலை செய்துவிடுவேன் என பொலிவுட் நடிகர் சல்மான் கான் மிரட்டியதாக எழுந்த புகாரையடுத்து பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

2001ஆம் ஆண்டில் வெளிநாட்டில் இருந்த ஐஸ்வர்யா ராய், உரையாடலை டேப் செய்துள்ளார். இந்த டேப் விவகாரம் மும்பை நாளிதழ் ஒன்றில் கடந்த வியாழக்கிழமை செய்தியாக வெளியாகியுள்ளது.

பத்திரிகை வெளியிட்ட உரையாடல் வருமாறு,

சல்மான்: மும்பை தாதா அபுசலெம் நிகழ்ச்சியில் பங்கேற்க முடியுமா? இல்லையா? என்பது தான் என் கேள்வி.

ஐஸ்வர்யா : நீங்கள் மது அருந்தி விட்டு பேசுகிறீர்கள். உங்களுடைய பேச்சை டேப் செய்கிறேன்.

சல்மான் : அபு சலேம்,சோட்டா கீல், தாவூத் இப்ராஹிம் மற்றும் குரு சதாம் ஆகியோருடன் எனக்கு தொடர்பு உள்ளது. எனவே நிகழச்சியில் பங்கேற்க வேண்டும். இல்லையெனில மும்பை தாதாக்கள் மூலம் உன்னையும் உன் குடும்பத்தாரையும் கொலை செய்து விடுவேன்.

'சோரி சோரி சுப்கே சுப்கே' திரைப்படம் சோட்டா ஷகீலின் நிதியுதவியால் தயாரிக்கப்பட்டது. அது எனக்கு மட்டும்தான் தெரியும். இன்னும் சொல்லப்போனால் பரத் ஷா மற்றும் நதீம் ரிஸ்விக் ஆகியோரைக் கூட தெரியாது. ஷகீலின் தொந்தரவினால்தான் நான் அந்தப் படத்தில் நடித்தேன். எனவே நான் சொல்வதை நீ கட்டாயம் கேட்க வேண்டும் என்றும் தொலைபேசியில் சல்மான் கான் கூறியுள்ளார்.



செய்திவெளியானதை அடுத்து ஐஸ்வர்யா ராயின் ரசிகர்கள் சல்மானின் போஸ்ரர்களை தாங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவம் குறித்து விசாரணைக்கு உத்தர விடப்பட்டுள்ளது. இது குறித்து பேரவையில் விரைவில் அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்று மூதல்வர் விலாஸ்ராவ் தேஷ்முக் தெரிவித்துள்ளார். (ற)




'வெட்டிங் கிராசர்ஸ்' கொலிவுட் படத்தின் முதல் காட்சி நேற்றுமுன்தினம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் திரையிடப்பட்டது. இதில் நடித்துள்ள நடிகர் கிறிஸ்ரோபர் வால்கென், மணப்பெண் வேடம் அணிந்த அழகிகளுடன் படத்தைக் காண வந்தபோது எடுக்கப்பட்ட படம்.

## என்ஜினில் கோளாறு

# 'டிஸ்கவரி' ஏவும்பணி ஒத்திவைப்பு

எரிபொருள் டேங்க்கில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அமெரிக்காவின் டிஸ்கவரி விண்வெளி ஓடத்தை ஏவுவது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஓடம் புதன்கிழமை ஏவப்படுவதாக இருந்தது. ஏவுவதற்கு இரண்டரை மணி நேரதுக்கு முன்பாக பயணத்தை ஒத்திவைக்க நாசா விஞ்ஞானிகள் முடிவு செய்தனர். அதுவரை இடி இடித்தது மட்டுமே சிறிய பிரச்சினையாக இருந்தது. ஆனால் நான்கு இன்ஜின் சென்ஸாரில் ஒன்றில் கோளாறு இருந்ததை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். எரிபொருள் முழுவதும் நிரப்பப்பட்டபோதும் கூட குறைவாக இருப்பதாக ஒரு சென்சார் காட்டியது தான் பிரச்சினை.

குறிப்பிட்ட இடத்தில் டிஸகவரியின் இயந்திரங்களின் செயல்பாடு நிறுத்தப்படுவதை உறுதி செய்ய இந்த நான்கு சென்சார்கள் தான உதவுகின்றன. அதிலேயே பிரச்சினை ஏற்பட்டதால், பயணத்தை நிறுத்துவதைத் தவிர விஞ்ஞானிகளுக்கு வேறுவழி இல்லாமல் போனது.

சில காரணங்களால் எதிர்பார்த்த விதத்தில் என்ஜின்கள் செயல்படவில்லை. ஆகவே ஏவும் பணியை ஒத்திவைக்கிறோம் என திட்ட இயக்குநர் மைக் லீன்பாச் கூறியுள்ளார். டிஸ்கவரியில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைக் கண்டறிய சிறிது காலம் பிடிக்கும் எனத் தெரிகிறது. இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பாக, கொலம்பியா ஓடம் வெடித்து சிதறிய பிறகு நாசா ஏவவுள்ள முதலாவது விண்வெளி ஓடம் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ். விராட் போர் விமானங்கள் நேற்று அந்தமான்- நிக்கோபர் தலைநகர் போர்ட்பிளேருக்கு வந்தன. இந்த போர் விமானம் இம்மாத இறுதியில் நடக்கும் சிங்கப்பூர், மலேசியா நாட்டு கூட்டு போர பயிற்சியில்...



# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை

பி. ஜே. ராஜய்யா



## 4 தடியெடுத்தான்!

வீடுவாசலைத் துறந்து வீதியில் வாழத்தொடங்கியிருந்த சிறுவன் சதாம் அழுக்கானான்...

வேளாவேளைக்கு உணவு இல்லை. மாற்றுத்துணி இல்லை. தலைவாரவில்லை. பார்ப்பதற்குப் பயங்கரமாய் அருவருப்பாய் இருந்தான். தெருநாய்கள் அவனைக் குத்திக்கிழிக்கிற மாதிரி கூர்மையாகப் பார்த்தன. பயந்தான்.

நாயைக் கண்டால் சதாம் பயந்து ஓடுவதும், சதாமைக் கண்டால் நாய்கள் துரத்தி வருவதும் அன்றாட வேடிக்கையாகிப் போனது. நாய்களின் அச்சுறுத்தலோடு, அவனது வயதையொத்த சிறுவர்களின் கேலியும் சேர்ந்து சதாமை வதைத்தது. அவர்களின் நையாண்டி, "நாய்க்குப் பயந்து ஓடு கிறான், பயந்தாங்கொள்ளி" என்று ஆரம்பிக்கும். "அப்பா இல்லாதவன்", "முறை கேடாகப்பிறந்தவன்" என்றெல்லாம் வளரும்.

நாய்களையும் சிறுவர்களையும் அடக்கி ஒடுக்க என்ன செய்யலாம் என்று யோசித்தான் சதாம். இடிந்த சுவருக்குப் பக்கத்தில் கிடந்த இரும்புத்தடி அவன் பார்வையில் பட்டது. அதைக் கையிலெடுத்தான். தரையிலிருந்து இடுப்பு உயரத்திற்கு இருந்தது அது. மேலே தூக்கிப்பிடித்து காற்றில் விளாசினான். சுழற்றுவதற்கு வாகாகத்தான் இருந்தது.

இரும்புத்தடியுடன் தெருவில் நடந்தான். அங்கிருந்த நாய் அவனைப் பார்த்ததும் வளக்கம் போல் குரைத்துக்கொண்டே பாய்ந்து வந்தது...

டக்கென நின்றான். நிதானித்தான். பக்கத்தில் வரட்டும் என்று காத்திருந்தான். நெருங்கி வந்ததும் இரும்புத்தடியால் அதன் முகத்தில் ஓங்கி ஒரு போடு போட்டான்.

இதை எதிர்பார்க்காத நாய், அடி பொறுக்க முடியாமல் தரையில் விழுந்து எழுந்து கத்திக்கொண்டே ஓட்டம் எடுத்தது.

இரும்புத்தடியை சதாம் பூரிப்புடன் பார்த்தான். நாய்களை இனி சமாளித்துவிட முடியும் என்ற நம்பிக்கை துளிர்த்தது.

அப்படியே அடுத்த தெருவுக்குப் போனான். அவனை அவமானப்படுத்தி ஆனந்தம் கொள்ளும் சிறுவர்கள் அங்கு விளையாட்டில் மும்முரமாக இருந்தார்கள். சற்றுத் தொலைவில், அவனைக்கண்டால் கடிக்க வரும் நாய் ஒன்று அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது.

சிறுவர்களின் அருகே சென்ற சதாம், அங்கே கிடந்த குப்பை கூளங்களை அள்ளிப்போட்டு தீ மூட்டினான்.

சிறுவர்கள் விளையாட்டை நிறுத்தி விட்டு அவனைச் சூழ்ந்து நின்று கேள்விக் குறியுடன் பார்த்தார்கள்.

அவர்களைப் பொருட்படுத்தாத சதாம், தன் கையில் இருந்த இரும்புத்தடியின் ஒரு முனையை நெருப்புக்குள் வைத்தான். அது பழுக்கக் காய்ந்ததும் ஒரு துணியின் உதவியுடன் மறுமுனையைப் பிடித்துத் தூக்கினான். தூங்கிக்கிடக்கும் நாயருகே போய் நின்றான். திரும்பிப்பார்த்தான். சிறுவர்கள் தன்னைப் பார்த்துக்கொண்டிருப்பதை உறுதி செய்துகொண்டான். பழுக்கக் காய்ந்த இரும்புத்தடியின் முனையை நாயின் உடலில் வாலுக்குக்கீழே, பின்புறத்தில்- ஆத்திரத்துடன் ஆழமாகச் சொருகினான்.

அலறியடித்து விழித்த நாய் தீச்சூட்டையும் சொருகலையும் தாங்கமுடியாமல் ரத்தம் சொட்டச் சொட்ட கதறிக்கொண்டு ஓடியது.

சிறுவர்கள் அதிர்ந்தார்கள். சதாமின் கண்களில் தெரிந்த கொடூரமும் அவன் செய்த கோரச் செயலும் அவர் களை குலை நடுங்க வைத்தன. அவர்களை நோக்கி இறுதி எச்சரிக்கை செய்வது போல விரல் நீட்டி அசைத்தான். "என்னிடம் வாலாட்டினால் இந்த நாயின் கதிதான் உங்களுக்கும்" என்பதை சொல்லாமல் சொல்லிற்று அவனது விரலசைவு.

வெலவெலத்துப்போன சிறுவர்கள் திரும்பிப்பார்க்காமல் ஓட்டம் பிடித்தார்கள். இனி என்றைக்காவது சதாமை கேலி செய்ய அவர்களுக்குத் தைரியம் வருமா, என்ன?

சதாம் தன் இரும்புத்தடியை மீண்டும் பெருமையுடன் பார்த்தான்.

தன்னை வெறுக்கும் சமூகத்திடமிருந்து பாதுகாத்துக்கொள்ள தன் வசம் அச்சமூட்டும் ஆயுதம் இருக்க வேண்டியது அவசியம் என்ற பாலபாடத்தை அன்று அவன் இரும்புத்தடியிடம் கற்றான்.

இரும்புத்தடியின் மகிமை புரிந்த பிறகு சதாம் அதை விட்டு பிரிவதே இல்லை. அந்த "இரும்புத்தடி சிறுவன்" மேல் நாய்களுக்கும் சிறுவர்களுக்கும் இருந்த அச்சம் நாளடைவில் பெரியவர்களுக்குப் பரவியது. முன்பு அவனை அலட்சியப்படுத்தியவர்கள் இப்போது பயந்து பணிந்தார்கள். அவன் என்ன சொன்னாலும் செய்தார்கள். கேட்டது கிடைத்தது.

மேலும், தன் வளர்ப்புத் தந்தைக்காக ஆடு, கோழி அபேஸ் செய்த அனுபவம் கொஞ்சம் கைகொடுத்தது. இவற்றோடு, தன் சுயதேவை பூர்த்திக்காக அவன் இன்னொரு காரியமும் செய் தான். அது -தர்ப்பூசணி வியாபாரம்.

டைக்ரிஸ் நதியோர மேட்டுநிலத்தில் தர்ப்பூசணிக்கொடி தரையோடு தரையாய் அடர்த்தியாய் கண்ணுக்கெட்டிய தூரம் வரை படர்ந்திருந்தது. அதில் விளையும் காய்களை அல்-அவ்ஜ்யா கிராம வாசிகள் ஒரு பொருட்டாய் நினைப்பதேயில்லை. ஆனால் சதாமுக்கு மட்டும் அதன் மதிப்புத் தெரிந்திருந்தது.

அவன் சுமக்க முடிந்த அளவு தர்ப்பூசணியை பறித்துத் தூக்கிக்கொண்டு, அருகிலுள்ள திக்ரித் நகரத்துக்குப் போவான். அங்கு ரயிலடியில், காயைத் துண்டு துண்டாய் நறுக்கி ஒரு தட்டில் வைத்துக்கொண்டு காத்திருப்பான்.

பாக்தாத்துக்கும் மோசூலுக்கும் இடையில் ஓடும் ரயில் திக்ரித் நிலையத்தில் சிறிது நேரம் நின்று இளைப்பாறும். அதில் அமர்ந்திருக்கும் பயணிகள், "கொளுத்தும் பாலை வெயிலில் வறண்டு போன நாக்குக்கு குளிர்ச்சியாக ஏதாவது கிடைக்காதா? என்று தவிப்பார்கள். தர்ப்பூசணி ... தர்ப்பூசணி... என்று கூவி அவற்றை அவர்களிடம் விற்று காசாக்கிக்கொள்வான் சதாம். இப்படி கூடுதல் வருமானத்துக்காக அவன் ஒரு நாள் தர்ப்பூசணி விற்றுக்கொண்டிருந்த போது தான் பாக்தாத்தில் இருந்து வந்த ஒரு ரயில் பயணி திக்ரித்தில் இறங்கினார். அவருக்கு சதாமை அடையாளம் தெரியவில்லை. ஆனால் சதாமுக்கு அவரை நன்றாகக் தெரிந்திருந்தது. அந்த பயணி தான் சதாமின் வாழ்க்கைப் பாதையை அடியோடு மாற்றி விளக்கேற்றப்போகும் விதியின் அடையாளம்.

(தொடரும்)

# என்றுதான் மாறுமோ —இந்த நிலை?—

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணி வைத்தியசாலையின் தற்போதைய அபிவிருத்திக்குழுவைக் கலைத்துவிட்டு புதிய குழுவொன்றைத் தெரிவு செய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ் வைத்தியசாலையின் சொத்துக்கள் ஒழுங்கான முறையில் பராமரிக்கப்படுவதில்லை எனவும், பணியாளர்களின் சம்பளம் உரிய முறையில் வழங்கப்படுவதில்லை எனவும், இவ் வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழுக்கூட்டம் ஒழுங்காக நடைபெறுவதில்லையெனவும், அவர்கள் வைத்தியசாலைக்கு விஜயம் செய்வதேயில்லையெனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதி மக்கள் தலையிடி, தடிமன், காய்ச்சல் போன்ற வருத்தங்களை தவிர மற்றைய வருத்தங்களுக்கு சிகிச்சை பெறவேறு வைத்தியசாலைகளை நாடவேண்டியுள்ளதாகவும், அதற்குக் காரணம் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு புதிய வைத்தியர்கள் இங்கு வருவதே என்றும் கவலை தெரிவிக்கும் அவர்கள் 20.06.2005ஆம் திகதி இதுவிடயம் தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதத்துக்கு இற்றைவரை உதவி அரசஅதிபரிடமிருந்தோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்தோ எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்றும் கூறுகிறார்கள். (து-97)

# "சிறிலங்காவில் இருந்து சிசிலிவரை" சாதனை படைத்த ஆய்வு நூல்

(கொழும்பு)

இத்தாலி பலெர்மோவின் பல்கலைக்கழக மாணவரான மாறியோ பிறிஸ்சா என்பவர் 'சிறிலாங்காவில் இருந்து சிசிலி வரை' என்னும் தலைப்பில் தமிழ் மக்கள் பற்றிய ஓர் ஆய்வினை கடந்த 4 வருடங்களுக்கு மேலாக ஆய்வு செய்து சிறப்புப் பெற்றுள்ளார்.

இந்த ஆய்வை 183 பக்கங்களை கொண்ட புத்தகமாகவும் படங்களுடன் கூடிய இறுவட்டாகவும் கடந்த திங்கட்கிழமை பலெர்மோ பல்கலைக்கழகத்தில் பன்னிரண்டு பேராசிரியர்களிடம் தேர்வுக்கு அவர் சமர்ப்பித்தார்.

இதனை ஆய்வு செய்த நீதிபதிகளான பேராசிரியர்கள் இவரின் இச்சிறப்பு மிக்க ,ஆய்வுக்கு 130 புள்ளிகளுக்கு 130 புள்ளிகள் வழங்கியதுடன் மேலும் அதி உயர் சிறப்புப் பட்டமும் டாக்டர் பட்டமும் கொடுத்து சிறப்பித்தனர்.

தனது புத்தகத்தில் தமிழர்களின் ஆதிகால கலாசாரம் முதல் இன்றைய சமாதான ஒப்பந்தம் வரையிலான நிகழ்வுகளை மாறியோ பிறிஸ்சா பதிவு செய்துள்ளார்.

எமது நியாயமான விடுதலைப் போராட்டம் சர்வதேச அங்கீகாரத்தின் அண்மையில் நின்று கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் மாறியோ பிறிஸ்சாவின் தமிழ் தேசிய உரிமைப்போராட்டம் பற்றிய ஆய்வும், இந்நூலும் இத்தாலிய அரசுக்கும் மக்களுக்கும் உண்மைத்தன்மையை தெளிவுபடுத்த உதவும் என நம்புவதாக இத்தாலிய புலம்பெயர் தமிழர்கள் கருத்துத் தெரிவித்தனர்

இன்றைய இளைய தலைமுறையே நாளைய நாட்டின் தலைவர்கள் என்ற எங்கள் தேசியத்தலைவரின் எண்ணக்கருவுக்கமைய இளைய சமுதாயத்தினர் எமது தேசிய விடுதலைப்போராட்டத்தினை ஆய்வு செய்து அதனை வெளிக்கொண்டு வரவேண்டும். மாறியோ பிறிஸ்சாவின் பணி மற்றவர்களுக்கும் எம்மவர்களுக்கும் நல்ல உதாரணமாகும் என்றும் அவர்கள் கூறினர். (க)

## வவுனியா வைத்தியசாலையில் சம்பவம்

# மகப்பேற்றுக்காகச் சென்ற பெண் கடுமையாகத் தாக்கப்பட்டார்

(வவுனியா)

வவுனியா பொது வைத்தியசாலைக்கு மகப்பேற்றுக்காக கடந்த 3ஆம் திகதி கொண்டுசெல்லப்பட்ட பெண்ணொருவரை மகப்பேற்று விடுதியில் கடமையிலிருந்தவர்கள் கடுமையாகத் தாக்கியதுடன் திட்டியுமுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா மாவட்ட அதிகாரிகள் கடந்த திங்கட்கிழமை பாதிக்கப்பட்ட பெண்ணிடம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அத்துடன் பெண்கள் அமைப்புகளும் இச்சம்பவம் தொடர்பான உண்மை நிலைமைகளை விசாரித்துவருகின்றன. குறிப்பிட்ட பெண்ணை கடுமையான வார்த்தைப் பிரயோகம் மூலம் திட்டித்தாக்கியதுடன், கணவன், தாயாரென உறவினர்கள் அவரைப் பார்ப்பதற்கும் நீண்ட நேரமாக உத்தியோகத்தர்கள் அனுமதிக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக வைத்திய அத்தியட்சகர் தெரிவிக்கையில், பாதிக்கப்பட்டதாகக் கூறும் பெண், குழந்தையின் இருதயத் துடிப்பை அறிவதற்கான கருவியை உடைக்க முற்பட்டதனால் தான் அவருடன் கடுமையாக நடந்து கொண்டதாக சம்பவம் நடைபெற்ற தினத்தன்று கடமையிலிருந்த உத்தியோகத்தர்கள் கூறியதாகக் குறிப்பிட்டார். (ற)

## இராணுவ விட்டோடிகள்

# சட்டரீதியாக விலகுவதற்கு மீண்டுமோர் சந்தர்ப்பம்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு சட்டரீதியாக இராணுவத்திலிருந்து விலகுவதற்கு இம்மாதம் 25ஆம் திகதியிலிருந்து இறுதிச் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி அவர்கள் சட்டரீதியாக இராணுவத்திலிருந்து விலகாவிட்டால், இராணுவத்தை விட்டு தப்பியோடியவர்களாகக் கருதப்பட்டு அவர்கள் கைது செய்யப்படுவார்கள்.

பின் அவர்கள் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் சிறையிலடைக்கப்படுவார்கள் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (ற-4)

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின் - குறள்

வலம்புரி

# முறுகல் நிலையை தவிர்க்க நோர்வே உதவ வேண்டும்

திருகோணமலையில் இடம்பெற்ற முறுகல் நிலையால் மக்கள் மத்தியில் பயப்பீதி ஏற்பட்டுள்ளது. சமாதான முயற்சிகள் குழம்பிவிடுமோ, மண்டும் யுத்தம் ஆரம்பித்துவிடுமோ என்ற ஏக்கமே பயப்பீதிக்கான காரணமாகும்.

கடந்த இரு தசாப்தங்களாக நடந்த யுத்தத்தால் உயிரிழந்து போனவர்கள் ஏராளம். இந்த இழப்புக்களோடு சொந்தக் குடியிருப்புக்களை படையினர் கபளீகரம் செய்து கொண்டுள்ளமை, அதன் விளைவாக ஏற்பட்ட அகதிவாழ்வு, இவை எல்லாம் சேர்ந்து வாழ்க்கையையே வெறுப்படைய வைத்து விட்டது.

மனித வாழ்வு என்பது ஏதோவொரு விருப்போடு-நம்பிக்கையோடு கூடியது. ஆனால் ஈழத் தமிழ் மக்களை பொறுத்தவரை அவர்களின் வாழ்வியலல் நம்பிக்கை அற்ற தன்மையை அரச தரப்பு ஏற்படுத்திவிட்ட கொடுமை துன்பகரமானது.

எமது சொந்த வாழ்விடங்களில் குடியிருப்பதற்கு அனுமதியுங்கள் எனக்கேட்பது அடிப்படை மனித உரிமையாகும். அதைக்கூட செய்வதற்கு விருப்பமில்லாத அரசுடன், படைத்தரப்புடன் எவ்வாறு இணைந்து சேர்ந்து வாழமுடியும்?

இந்த நியாயமான கேள்வியை இதுவரை சர்வ தேசசமூகம் உணர்ந்து கொள்வதாக இல்லை. ஒருநாட்டின் மக்கள் தொகுதியில் பெரும்பானமை என்ற ஒரேகாரணத்திற்காக அந்த இனந்தான் வாக்குரிமையால் தெரிவுசெய்யப்படும் அரசு செய்து கொள்வதெல்லாம் சரியானதும், நியாயமானதெனவும் நினைப்பது மிகப்பெரும் தவறாகும்.

இலங்கை அரசைப் பொறுத்தவரை இந்த முடிவையே உலகநாடுகள் எடுத்துள்ளன. இதன் காரணமாகவே இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதில் தாமதமும் தடையும் காட்டிவருகின்றனர்.

விரும்பமில்லாத கணவனும் மனைவியும் விவாகரத்தின் மூலம் விலகிக்கொள்வதற்கு இடம் கொடுக்கும் உலக நீதி, விருப்பமில்லாத ஆட்சியாளர்களிடமிருந்து பிரிந்து சென்று தமக்கான ஓர் ஆட்சியை அமைத்துக்கொண்டு தமது வாழ்வயலை தீர்மானிக்கும் உரிமையை மட்டும் கொடுக்கத் தயங்குவது ஏன்?

பெரும்பான்மை இனம் என்றால் அவர்கள் சிறுபான்மை இனத்தை நசுக்கும் அதிகாரத்தை கொண்டவர்கள் என்பதாலா? அல்லது பெரும்பான்மை இனம் எடுக்கின்ற முடிபுகள் சரியாக இருக்கும் என்ற ஊகத்திலா? இந்த வினாக்கள் சிறுபான்மை இனங்கள் எழுப்பிய போதிலும், முதலாளித்துவப் போக்குடைய வல்லரசுகள் அதனை ஒரு பொருட்டாக கருதவில்லை.

இத்தகைய நிலைமைகளால் இலங்கையில் மட்டுமன்றி உலகின் பல்வேறு நாடுகளிலும் பெரும்பான்மையின் ஆதிக்கத்திற்கு சிறுபான்மை இனம் அடிமைப்பட்டு போயுள்ளது.

உலகில் அமைதி நிலவவேண்டும். எல்லா மக்களும் சம உரிமையோடு வாழவேண்டும் என்பது பொது நீதியாக-பொதுவிதியாக கருதப்படுமாயின் பெரும்பான்மையுடன் வாழமுடியாது என போராடுகின்ற சிறுபான்மை இனத்தினரை, பிரிந்து செல்ல அனுமதிப்பதே முறையாகும்.

அவ்வகையில் இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் சமாதான அனுசரணையாளராக செயற்படும் நோர்வே, தற்போது ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை தவிர்த்து நிரந்தர சமாதானத்திற்கு உதவவேண்டும்.

அது முடியவில்லை எனில் தமிழ் மக்கள் தமக்கான ஆட்சியை அமைப்பதற்கு உதவவேண்டும். இதுவே தமிழ்மக்களின் தாழ்மையான வேண்டுதல்.








அகில இலங்கை இந்துமாமன்ற பொன்விழாவை ஒட்டி அகில இலங்கை இந்துமா மன்றமும் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து நடாத்தும் இந்து மாநாட்டில் ஆரம்ப நாளான நேற்று இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டோரை படங்களில் காணலாம்.

(படங்கள் ஐங்கரன்)

# மீண்டுமோர் யுத்தம் ஏற்படுவதை மூவின மக்களும் விரும்பவில்லை

## மட்டு. சுமங்கலாராமய விகாரை பிக்கு

(கொழும்பு)

நிலவுகின்ற தற்போதைய முரண்பாடுகளிடையே மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதனை மூவின மக்களும் விரும்பவில்லை என்பதுடன் அவ்வாறானதொரு சூழல் உருவாகுவது தொடர்பாக மூவின மக்களும கவலை கொணடுள்ளனா் என மட்டக்களப்பு சுமங்கலாராமய விகாரையின் பிக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது,

ஆசிய நாடுகள் இன்று இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை மிகவும் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கின்றன. மக்கள் மத்தியில் தற்சமயம் பயம் கலந்த நிலை ஏற்பட்டுள்ளது.

திருகோணமலையில் இடம்பெறும் சம்பவங்கள் யாவும் கடந்த மூன்றரை வருடங்களாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த யுத்த நிறுததம் முறிந்து யுத்தம ஏற்படுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 20 வருடங்களாக நிலவி வந்த யுத்த சூழ்நிலையானது மீண்டும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் அரசாங்கம் உறுதியான நிலையை எடுக்கவேண்டும்.

இலங்கையில் உள்ள ஜனநாயகவாதிகள் எனக்கூறப்படுவோர்களின் நடவடிக்கைகள் காரணமாக இன்று ஜனாதிபதிக்கு பாரிய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து தருமாறு கோரியுள்ள போதும் அதனை நிராகரிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதறகு நாடாளுமன்றத்திலும் வெளியிலும் ஜனநாயகவாதிகள் எனக்கூறிக்கொள்வோர் ஏற்படுத்தியுள்ள தாக்கமே காரணமாகும்.

கொழும்பில் உள்ள பெளத்த துறவிகளும் அங்கு பாதையில் இறங்கி இவ்வாறான நடவடிக்கைகளுக்கு உதவி புரிகின்றனர். பிரபாகரனால் எவ்வித அச்சுறுத்தல்களும் எமக்கு இல்லை. சிங்களவர்களாலேயே எமக்கு அச்சுறுத்தல் ஏற்பபட்டுள்ளது. எனவே ஜனாதிபதியும் எதிர்க்கட்சித்தலைவரும தற்போதைய சூழ்நிலையில் கவனமான நகர்வை மேற்கொண்டு நாட்டின் பிரச்சினையை உடனடியாக குறுகிய காலத்திற்குள் தீர்ப்பதன் மூலமே இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர முடியும அல்லது மீண்டும் ஒரு யுத்த இருள் சூழ்நிலை ஏற்படும் என்பதில் ஐயம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார். (ற)

நல்லூர் ஆலய உற்சவகால ஒழுங்குகள்

# இறுதி முடிவுகள் எடுக்கும் விசேட கூட்டம் 28 இல்!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய உற்சவகால ஒழுங்குகள் தொடர்பான இறுதி முடிவுகள் எடுக்கப்படும் விசேட கூட்டம் ஒன்று எதிர்வரும் 28 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு யாழ். மாநகர சபையில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடை பெறவுள்ளது.

இவ் விசேட கூட்டத்திற்கு உற்சவகாலத்தில் கடமையாற்றும் தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலகர்கள், பொலிஸ் உத்தி யோகத்தர்கள் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் ஆகியோரும் அழைக்கப்படவுள்ளனர். (ற-19)

## தினசரி தியானம்



### விவேகச் சிந்தனைகள்

உங்கள் இறைத் தன்மைதான் இறைவன் இருப்பதற்கே அத்தாட்சி நீங்கள் தீர்க்க தரிசி இல்லை என்றால் கடவுளும் உண்மை அல்ல. நீங்கள் கடவுள் அல்ல என்றால் வேறு எந்த கடவுளும் இருந்ததும் இல்லை இருக்கப் போவதும் இல்லை இதுவே பின்பற்றவேண்டிய இலட்சியம் என்று வேதாந்தம் கூறுகிறது.

சுவாமி விவேகானந்தர்

# அடுத்த ஆண்டே ஜனாதிபதித் தேர்தல் அடித்துக் கூறுகிறார் ஜனாதிபதி

(மாத்தளை)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசாங்கம் அடுத்த 5ஆண்டுகளுக்கு தொடர்ந்தும் பதவியில் இருக்கும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் மீது மக்களுக் பூரண நம்பிக்கை இருப்பதால்அரசாங்கம் இன்னமும் பலமுடையதாக இருப்பதாக ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

மாத்தளையில் நேற்று மாலை வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

நாட்டு மக்களின் பலத்தினை பயன்படுத்தி அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படும். ஜனாதிபதித் தேர்தலை இவ்வாண்டு நடத்துமாறு ஐக்கிய தேசியக்கட்சி கோருகின்றனர். ஆனால் ஜனாதிபதித்தேர்தல் அடுத்த ஆண்டே நடாத்தப்படும். அதில் எவ்வித மாற்றமும் இல்லை என அவர் தெரிவித்தார். (ச-4)

# பொதுக்கட்டமைப்பின்....

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள பொதுகட்டமைப்பு ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது போன்று 6மாவட்டங்களில் பிராந்திய நிதியங்களை ஏற்படுத்த முடியாது.

சுனாமிக்குப் பின்னரான கரையோர நிதியம் என்ற பெயரில் நிதியம் ஒன்று ஏற்படுத்த தடை செய்யப்பட்டுள்ளது. இதற்குப்பதிலாக அரச நிதியம் ஒன்றினை ஆரம்பிக்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

திட்ட முகாமைத்துவக் குழுவையும் செயற்படுத்த முடியாது சுனாமிக்குப்பின்னரான முகாமைத்துவ கூட்டமைப்பின் பிரதேச குழுவை கிளிநொச்சியில் ஸ்தாபிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கான அனுமதியும் முகாமைத்துவமும் குறிப்பிட்ட அரசகொள்கைகள் மற்றும் சட்டத்திற்கமைய மேற்கொள்ள முடியும் என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அரசுத்தலைவி என்ற வகையில் விடுதலைப்புலிகளுடன் இத்தகைய ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்வதற்கு ஜனாதிபதிக்கு பூரண அதிகாரம் உண்டு.

அதேபோன்று விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசுடன் இத்தகையதொரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட சுதந்திரம் உள்ளது.அவ்வடிப்படை உரிமை மீறல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொள்வதுடன் விசாரணைகளை செப்ரெம்பர் மாதம் 12ம் திகதி நடாத்தப்படுமென இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-4,9)

# ஆட்டோ...

டோசாரதியான ஏச்.முஹமட் நாசார் (வயது 23) மற்றும் அப்துல் லத்தீப்ரிபாஸ்(வயது 26) எனவும் மற்றையவர் பழுகாமத்தைச் சேர்ந்த ஜெயசேகர பண்டா விஜேந்திரன் (வயது 21) என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இக்கொல்லைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும்அக்கரைப்பற்றுப் பொலிஸார் வெளியிட்டுள்ள தகவல்களின் படி இக்கொலையினைச் செய்வதற்கு தன்னியக்கத் துப்பாக்கி பயனபடுத்தப்பட்டிருப்பதாகவும் இக்கொலைகளுக்கு பொறுப்பானவர்களை அல்லது இதற்கான பின்னணியோ இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டம் வீரமுனை பொலிஸ் காவல் நிலையத்தின் மீது கைக்குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இத்தாக்குதலில் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை என இராணுவத்தினர் தெரிவித்தனர். (ச-4)

# இந்து...

அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை நாளைய மூன்றாம் நாள் நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டவாறு நடைபெறும். (ச)

# இந்து மாநாட்டில்...

சேவைகளுக்காக கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு 'தெய்வத் திருமகள்'என்றபட்டமும் வழங்கிக்கௌரவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பொதுக்கட்டமைப்பு நிதிகளை திறைசேரி மூலமே செலவிட முடியும்

## நிதியமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புக்கு வரும் அனைத்து நிதியும் திறைசேரி மூலமாகவும் நிதியமைச்சு மற்றும் கணக்குத் தணிக்கையாளர் ஒப்புதலுடனேயே செலவிடப்படும் என்று நிதியமைச்சர் சரத்அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகவியலாளர் ம்த்தியில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பின் பிரதேச குழுவில் 5தமிழீழ விடுதலைப்புலிகளை உள்ளடக்கிய 10பேர் இடம் பெறுகின்றனர்.

5தமிழீழ விடுதலைப்புலிகள் இடம்பெறுவதால் அவர்களால் எதையும் எம்மீது திணிக்க இயலாது. அரசதரப்பின் இருவர் ஆட்சேபனை தெரிவித்தாலும் எழு உறுப்பினர்களின் ஆதரவுடன் தான் எந்தவொரு முடிபும் மேற்கொள்ளப்படவேண்டும்.

மாவட்டக்குழுக்கள், அமைச்சர்கள் அல்லது அரச செயலர்கள் தலைமையில் அமையும் அனைவருக்கும்ஒரு வாக்குத்தான் என அவர் மேலும்தெரிவித்தார். (ச)

# திருமலையில்...

தலைவர்கள் தமது நன்றியினைத்தெரிவித்தனர். இதேவேளை பிரதமர் மகிந்த இராஜபக்ஷவும் திருகோணமலைக்கு நேற்று திடீர்விஜயம் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது..

இது இவ்வாறு இருக்க திருகோணமலையில் நேற்று அசம்பாவிதம் எதுவும் ஏற்படவில்லை என அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

படையினரும் பொலிஸாரும் அங்கு பெருமளவாக குவிக்கப்பட்டிருந்தனர். இதனால் மக்கள் மத்தியில் பீதியும் பதற்றமும் காணப்பட்டது. (ச-4)





மனோகரா யாழ்ப்பாணம்

ஷங்கரின் இயக்கத்தில்

4வது வெற்றி வாரம்

சியான் விக்கிரம், சதா, விவேக் ஆகியோரின் சிறப்பு நடிப்பில்

அந்நியன்

கா.நே:10.30, 2.30,6.30, 9.30

20 ஆம் திகதிவரை

22.7.05 முதல் அதிரடி வெளியீடு இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதினத்தில்

மாதவன், சதா, கோவைசரளா நடித்த பிரியசகி

நிறைஞ்சனாஸ் சினிமா

சங்கானை

அஜித், தேவயானி, நடித்த

காதல் கோட்டை

காட்சி நேரம்: 11.00, 2.45 06.00 (பு.நே)


# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 2005

**நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் பின்வரும் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலங்களை தற்காலிக குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன**

| | |
|---|---|
| 01. கச்சான் கடைகள் | 05. ஐஸ்கிறீம் கடைகள் |
| 02. மணிக்காப்புக் கடைகள் | 06. ஐஸ்கிறீம் வாகன நிலையங்கள். |
| 03. இனிப்புக் கடைகள் | 07 துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம். |
| 04 இதர கடைகள் | 08. விளம்பர முகவர் நிலையங்கள். |

**இதற்கான கேள்வி விண்ணப்பப்படிவங்கள் 18.07.2005 தொடக்கம் 01.08.2005 நண்பகல் 12 மணி வரை வழங்கப்படும்.**

கேள்வி ஏற்றுக்கொள்ளல் 01.08.2005 பிற்பகல் 2.30 மணிவரை

கேள்வி திறத்தல் 01.08.2005 பிற்பகல் 3 மணி

மீளளிக்க முடியாத கேள்வி விண்ணப்பப் படிவக்கட்டணம் ரூபா 300.00 (வற் நீங்கலாக)

மீளளிக்க கூடிய கேள்வி வைப்புப்பணமாக ஐஸ்கிறீம் கடைகள் ரூபா 10000.00 ஏனைய கடைகள் ரூபா 1000.00

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் யாவும் அரக்குமுத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் வியாபாரத்தின் தன்மை குறிப்பிடப்பட்டு மாநகர ஆணையாளர், மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிடப்பட்டு பதிவுத்தபாலில்/நானாவித இறைவரிப்பகுதியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும்.

கேள்விகள் திறக்கப்படும் போது உரிமையாளர் அல்லது பிரதிநிதிகள் பிரசன்னமாயிருக்கலாம்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற் நானாவித இறைவரிக் கிளையில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்வதுடன் கடைகளுக்கான வரைபடத்தையும் நேரில் பார்வையிடலாம்.

குறிப்பு:- மேற்படி சபையால் வழங்கப்படும் தற்காலிக கடைகளைத் தவிர எதிர்வரும் 09.08.2005 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பித்து சபையின் அனுமதி பெற்றிராத எந்தத் தற்காலிக வியாபாரமும் திருவிழாக் காலத்தில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

**கலாநிதி க.குணராசா,**
**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

**மாநகராட்சி மன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

(C/1562)

# மாநகரசபை யாழ்ப்பாணம்

## கட்டிட நிர்மாண, வீதிஅமைப்பு வேலைக்குத் தேவையான மூலப்பொருட்களை விரைவாக வழங்கக் கூடியவர்களைக் கோருதல்

**2005 ஆம் ஆண்டுக்கான மாநகர சபையின் அவசர வேலைத் திட்டங்களிற்குத் தேவையான கீழ்க்காணும் மூலப் பொருட்களை விரைவாக மாநகரசபைக் களஞ்சியத்திற்கு கொண்டு வந்து ஒப்படைக்கக கூடிய மூலப்பொருட்களின் அளவும், ஒரு கியூப் கல், மணல் விலையையும் கொண்டதாக படிவ அமைப்பில் தயாரித்து 25.07.2005ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் நேரில் ஒப்படைக்குமாறும், அதனைத் தொடர்ந்து மு.ப 11 மணிக்கு இடம்பெறும் கலந்துரையாடலிலும் பங்குபற்றுமாறும் தயவாக கேட்டுக்கொள்கின்றேன்.**

01) 4" கல், 6"-9" கண்டகல் -ஒவ்வொரு கியூப்பின் விலை குறிப்பிடவும்.

02) நாகர்கோவில் மணல்- ஒரு கியூப்பின் விலை

03) ஒரு மாதகாலத்தில் வழங்கக்கூடிய பொருட்களின் அளவினை குறிப்பிடவும்

**கலாநிதி க.குணராசா**
**மாநகர ஆணையாளர்**
**யாழ்ப்பாணம்.**

**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**

(c-1561)

# பதவி வெற்றிடம்

***கணணி பக்க அமைப்பாளர்கள்**

(ஆண்கள் இரவுக்கடமை)

***பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**

(பெண்கள் பகல் கடமை)

**வலம்புரி நிறுவனத்திற்கு 5கிலோமீற்றர் தூரத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டும் பிற்பகல் 3.30மணிக்கு சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில்வரவும்.**

ஆளணி முகாமையாளர்
வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.